

301. கூடு தேடிய உயிர்

இருவருள்ளத்திலும் ஒரே கவலை — சீதையைப் பற்றிய கவலைதான். தனியாக வந்த லட்சுமணனைக் கண்டதும் ராமன் கவலை அதிகப்படுகிறது. 'ஹா ஸீதே, லக்ஷ்மணா!' என்ற மாய அலறலைக் கேட்டதும் சீதை மன உறுதி குலைந்து மயங்கிப் போவாளோ, என்னவோ?— என்று ஊஞ்சலாடிக் கொண்டிருந்த ராமனுள்ளம் லட்சுமணனைச் சிறிது தூரத்தில் பார்த்ததுமே எண்ணாததெல்லாம் எண்ணத் தொடங்குகிறது.

அனுமானம் சரிதான், ஆனால்?

'சீதையைப் பாதுகாத்திருப்பாய் என்றல்லவா சொல்லியிருந்தேன்? என் சொல்லை மீறி இளவீரன் எப்படித்தான் சீதையைத் தனியே விட்டுவரத் துணிந்தானோ?' என்று எண்ணமிடும் ராமன் தன்னை அணுகி வரும் தம்பி முகத்தை நன்றாகப் பார்த்து விடுகிறான் :

கண்ணனும் இளவலைக்
கண்ணுற் றானரோ.

[இளவல் — தம்பி.]

இள வீரன் முகத்திலேதான் என்ன தளர்ச்சி! அத் தளர்ச்சி அவ்வளவு தெளிவாய்த் தெரிந்து விடுகிறது. அந்த மாயமான் வேட்டைக்குப் பின், அந்த வஞ்சனைக்குப் பின், ராமனுடைய தளராத உள்ளமும் தளர்ந்து போகிறது, — வேட்டையாடிய தளர்ச்சி திருமேனியில் ஏற்படா விட்டாலும். இந்த நிலையில் ராமன் ஒரு கணம் ஆலோசித்துப் பார்க்கிறான், அனுமானித்து அறியப் பார்க்கிறான் லட்சுமணன் வந்திருக்கும் காரணத்தை:

புன்சொற்கள் தந்த
பகுவாய் அரக்கன்
உரைபொய்யெ னாது
புலர்வாள்,

வன்சொற்கள் தந்து
மடமங்கை ஏவ,
நிலைநேர வந்த
மருளோ,
தன்சொற்க டந்து
தளர்கின்ற நெஞ்சம்
உடையேன் மருங்கு
தனியே
என்சொற்க டந்து
மனமும்த ளர்ந்த
இளவீரன் வந்த
இயல்பே ?

[புன்சொற்கள்—(இங்கே) குற்றமுள்ள அற்பச் சொற்கள். பகுவாய்—பிளவு பட்ட வாய். எனாது—என்று எண்ணாமல். புலர்வாள்—வாடுகின்றவளாய். வன்சொற்கள்—கொடிய வார்த்தைகள். மடமங்கை—இளமையும் பேதைமையும் வாய்ந்த சீதை. நிலை—(என்) நிலைமை. நேர—தெரிய. மருளோ—மயக்கமோ. தன் சொல்—('அது மாயமான்' என்று எச்சரித்த) லட்சுமணனுடைய வார்த்தை. மருங்கு—அருகிலே.]

தம்பி சொல்லைத் தட்டியதால் நேர்ந்த விபரீதத்தை, வீணை அலைச்சலை, நினைந்து வருந்தித் தளர்ந்த வண்ணம் பர்ணசாலையை நோக்கித் திரும்பி வருகிறான் ராமன். இப்படி வருகிறவன் தம்பியைக் கண்ணுற்றதும், 'அவ்வளவு தூரம் முன்ஜாக்கிரதையாக எட்டிப் பார்த்து எச்சரிக்கை செய்தவன், மாய அரக்கன் இறக்கும்போது வாய்திறந்து அலறியது கேட்டு மயங்கி யிருக்கமுடியுமா? அப்படியிருக்கவே முடியாது. நான் அபாயத்திற்குள்ளாகி உதவி வேண்டி அலறியதாகத் தம்பி ஒருபோதும் நம்பியிருக்க மாட்டான்' என்று துணிகிறான். 'மாயமானைக் கண்டு மயங்கிய சீதை தான் அரக்கன் அலறிய பொய்யையும் மெய்யென்று மயங்கி யிருக்க வேண்டும். என்னை மானின் பின் அனுப்பியதுபோல் லட்சுமணனையும் இப்போது இங்கே என் நிலைமை தெரிந்துவர அனுப்பியிருக்க வேண்டும்' என்று ஊகிக்கிறான். லட்சுமணன் தேற்றியும் தெளியாமல் 'வன்சொற்கள்' சொல்லி ஏவியிருக்கவும் கூடும் என்றுகூட ஊகித்து விடுகிறான். ஆனால் 'எத்தகைய வன்சொற்கள்!' என்பதை ராமன் எப்படி அறிவான்? அந்த 'வன்சொற்க'ளைத் தம்பியும் வெளியிடவில்லை.

இளையவன் பெருங்குணம்

இப்படி ஊகஞ்செய்து 'இவ்வளவும் விதியின் சூழ்ச்சிதானோ?' என்று எண்ணிய ராமனுடைய அடிகளில் லட்சுமணன் விழுந்ததும், அண்ணன் தம்பியை எடுத்து மார்புறத் தழுவிக்கொண்டு, 'நீ எதற்காக வந்தாய், தம்பி?' என்று கேட்கிறான். கேட்டதும், தம்பி நடந்ததைச் சொல்லுகிறான். 'ஹா ஸீதே, லக்ஷ்மணா!' என்று மாரீசன் அலறிய அலறலைத் தான் 'கொடுஞ்சொல்' 'வெஞ்சொல்' என்று குறிப்பிடுகிறான். சீதை அச்சத்தால் ஏவியதாகவே கூறுகிறான். தான் மாய அரக்கனின் குரல் என்று வற்புறுத்தியும், தளர்ச்சியால் பிறந்த கோபத்துடன் அவள் தற்கொலை செய்துகொள்ள முயன்றாள் என்றும் தெரிவிக்கிறான். இளையவன் பெருங்குணம் இது.

தம்பி சொன்னதிலிருந்து ராமன் அந்த இருவர் செய்கைகளும் குற்றமற்றவையென்றே நிச்சயிக்கிறான். 'அவள் மனக்கலக்கத்தால் அப்படிச் செய்தாள்: அதுவும் குற்றமன்று. நீ அவளைச் சாவாது காப்பாற்ற வேண்டுமென்றுதான் இப்படி வந்தாய: இதுவும குற்றமாகாது' என்று கூறும் ராமன், 'எல்லாம் என் குற்றம்தான்' என்று ஏற்றுக்கொள்கிறான்:

'முந்தேத டுக்க
ஒழியாதெ டுத்த
வினையேன்மு டித்த
முடிவால்,
அந்தோ! கெ டுத்த
தே'னஉன்னி உன்னி
அழியாத உள்ளம்
அழிவான்!

[முந்தே — முன்னமே. தடுக்க — (நீ) தடுக்க. ஒழியாது — (பொய்மான் வேட்டையை) விட்டு விடாமல். எடுத்த வினையேன் — (அதைத்) தொடங்கிய செய்கையை யுடையவனான நான். உன்னி — நினைத்து.]

இப்படி ராமன் சொல்லியும் தமையன் மீதுள்ள பக்தியால்கூடச் சீதைமீது 'குற்ற'ப் பொறுப்பைக் குறிப்பாகவும் சுமத்தவில்லை லட்சுமணன்.



தம்பி தடுத்தும் கேளாது மாய மானின் பின் சென்ற தன் செய்கையே குற்றமுடையது என்று கூறும் ராமன், 'இனித் தாமதம் செய்யலாகாது. அவளைக் கண்டாலன்றித் துயரம் தீராது' என்கிறான். இருவரும் விரைந்து பர்ணசாலைக்குத் திரும்புகிறார்கள்.

இரண்டு உவமைகள்

பஞ்சவடி ஆசிரமத்தைத் தூரத்திலிருந்து கண்டதும் ஓடி வருகிறான் ராமன். ஒரே ஓட்டமாக வந்து பார்க்கிறான்; திகைத்து நிற்கிறான். அந்த ஓட்டத்தையும், அப்படி நிற்கும் நிலையையும், அந்தத் திகைப்பையும் ஏக்கத்தையும் அப்படியே பார்க்கிறோம் இந்தக் கவிதைக் கண்ணாடியில்:

ஓடி வந்தனன்,
சாலையின், சோலையின்
உதவும்
தோடி வர்ந்தபூஞ்—
சுரிகுழ லாள்தனைக்
காணான்,
கூடு, தன்னுடை —
யது பிரிந்(து), ஆருயிர்
குறியா
தேடி வந்(து),அது
கண்டில தாம்என,
நின்றான்.

[சாலையின் — பர்ணசாலையில். தோடு இவர்ந்த — இதழ்கள் நெருங்கிய. பூஞ்சுரி குழலாள் — பூக்களைச் சூடிய சீதை. காணான் — காணாதவனாய். கூடு, தன்னுடையது, பிரிந்து — தன்னுடைய உடம்பைப் பிரிந்து போய். குறியா — அந்தக் கூட்டைக் குறிக்கொண்டு. தேடி வந்து — தேடி வந்து. அது கண்டிலதாமென — அந்த உயிர் அந்தக் கூட்டைக் காணப் பெறாதது போல.]

கூடுவிட்டு வெளியே போயிருந்த உயிர் திரும்பி வந்து தேடித் தேகமாகிய கூட்டைக் காணாமல் திகைத்து நிற்பது போல நிற்கிறானாம் ராமன். வேறொரு உவமையாலும் ராமனுடைய நிலையை விளக்க முயல்கிறான் கவிஞன்:

உய்த்து வாழ்தர
வேறொரு பொருளிலான்,
உதவ
வைத்த மாநிதி,
மண்ணொடு மறைத்தனர்
வாரிப்
பொய்த்து ளார்கொளத்
திகைத்துநின் றானையும்
போன்றான்.

[உய்தது வாழ்தர — கொண்டு போய் வாழ. மா நிதி — பெருஞ் செல்வம். மறைத்தனர்—மறைத்து வைத்துக்கொண்டவர்களாய். பொய்த்துளார் — உண்மைக்கு மாறுபட்ட வஞ்சகக் கள்வர்கள்.]

இந்த உவமையின் பொருத்தம் குறித்தும் சிந்தியுங்கள். இனி, ராமனுடைய இந்த நிலையை நன்கு புரிந்து கொண்டு மேலே செல்லவேண்டும்.



302. உலகத்திலே அதர்மக் குழப்பம்

ஒருவன் தன்னுடைய அருமையான பொருளைப் புதைத்து வைத்திருந்தான். அவனுக்குள்ள செல்வமெல்லாம் அதுதான்; வேறொரு பொருளும் இல்லை. நல்ல காலம் திரும்பியதும் இந்தப் புதைபொருளைக் கொண்டு போய் வைத்துக்கொண்டு வாழலாமென்று ஆசை. பிற்காலப் பெருவாழ்வுக்கு உதவியாக 'வைத்த மாநிதி' என்றே அந்தப் பொருள் குறித்து நினைப்பு. இப்படி உதவிநிதியாகச் சேமித்துப் பூமிதேவியை மட்டும் நம்பி வைப்பது 'அன்னியர் படையெடுப்பு' 'ஹைதர் கலகம்' முதலான அபாய காலங்களில் சாதாரணமாய் நடைபெறக் கூடியதுதான். வேறு யாரை நம்பி, எந்தக் கடையை அல்லது ஸ்தாபனத்தை நம்பி, 'மாநிதி'யை வைத்துப் போகமுடியும்? கலகமும் கலக்கமும் ஒழிந்தபின், சாதாரணமான நல்வாழ்க்கையில் ஆசையுடன் வருகிறான் புதைபொருள் வைத்தவன். ஆனால் 'வைத்த மாநிதி' வைத்த இடத்தில் இல்லை — மறைந்து விட்டது! யாரோ மறைத்து விட்டார்; வாரிக்கொண்டு போய் விட்டார். 'வலிமையே உரிமை'யென்று சண்டைக்காரன் கொண்டு போகவில்லைதான்; ஆனால் 'திருட்டே உரிமை; வஞ்சகமே உரிமை!' என்றல்லவோ கொண்டு போய் விட்டார் வஞ்சகக் கள்வர், வஞ்சகப் பொய்யர்? இந்த 'வைத்த மாநிதி'யை நம்பி வாழ இருந்தவனுக்கு மனம் எப்படிக் கசந்து போகும்?

மண்ணோடு மறைந்த புதையல்

அப்படிக் கசந்துபோயிருக்கிறது மனம் ராமனுக்கும் சீதையைப் பர்ணசாலையில் காணவில்லை என்றவுடனே. ஆனால், இந்த 'வைத்த மாநிதி'யையோ மண்ணோடும் வாரிக்கொண்டு போய் மறைத்து விட்டார்கள். யாரோ? எத்தனை பேரோ? ஒரு திருடனா, திருடர் கூட்டமா?

புதையலைத் திருடிப் போகலாம்; புதையற் பொருள் வைத்திருக்கும் பாத்திரத்தோடும் எடுத்துப் போகலாம். ஆனால் புதையல் வைத்திருந்த

மண்ணையும் எடுத்துப் போவதில்லை, எடுத்துப் போகவும் முடியாதே! ஆனால் இங்கே,

வைத்த மாநிதி
மண்ணொடு மறைந்தனர்
வாரி!

என்கிறான் கவிஞன், — சீதையை ராவணன் மண்ணோடும் கொண்டு போனான் என்ற தன் கற்பனைக்கு ஆதாரவாகவே.

'ராவணன் சீதையைக் கைகளால் தொட்டு எடுத்து மடியில் வைத்துக் கொண்டு தேரேறிச் சென்றான்' என்ற ஆதிகாவியக் கதையோடு தன் மாறுபாட்டைத்தான் இக்கவிஞன் எத்தனை இடங்களில் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் வற்புறுத்துகிறான்!

குழப்பம் ஏன்?

நைந்து போன சிந்தையுடன் ராமன் திகைத்து நின்றதும், அந்தத் திகைப்பு உலகமெல்லாம் ஒரு குழப்பத்தை உண்டாக்கி விடுகிறதாம்:

மண்சுழன்றது;
மால்வரை சுழன்றது;
மதியோர்
எண்சுழன்றது;
சுழன்றதவ் எறிகடல்
ஏழும்;
விண்சுழன்றது;
வேதமும் சுழன்றது;
விரிஞ்சன்
கண்சுழன்றது;
சுழன்றது கதிரொடு
மதியும்!

[மால் வரை — பெரிய மலை. மதியோர் — அறிவாளிகள். எண் — எண்ணம். அவ் எறி கடல் ஏழும் — அலை வீசுகின்ற அந்தச் சமுத்திரங்கள் ஏழும். விரிஞ்சன் — பிரம்ம தேவன். கதிர் — சூரியன்.]

இந்த உலகக் குழப்பத்தை இந்தக் கவிதைக் கண்ணாடியிலும் பார்த்துக்கொள்ள வேண்டும்:

நீல மேனிய
நெடியவன் மனநிலை
திரிய,
மூல காரணத்(து)
அவனொடு முடிவுற
முற்றும்
கால மாமெனக்,
கடையிடு கணிக்கரும்
பொருள்கள்
மேல கீழுறக்
கீழன மேலுறும்
வேலை,—

[மேனிய — மேனியையுடைய. நெடியவன் — ராமன். மூல காரணத்து அவனொடு — மூலகாரண மூர்த்தியாகிய அந்தப் பகவானுடன். முடிவுற — லயப்பட. முற்றும் — அழியும். கடை யிடு — முடிவைக் கொண்ட; மிச்சமில்லாத. கணிக்கரும் பொருள்கள் — கணக்கிடுவதற்கு அருமையான பொருள்களெல்லாம். மேல — மேலுள்ளவை. கீழுற — கீழாக. கீழன — கீழுள்ளவை. மேலுறும் வேலை — மேலாக நிலைதடுமாறும் அந்த வேளையில்.]

ராமனுடைய உள்ளம் திகைத்துச் சுழலவே மண்ணும் விண்ணும் சுழல்கின்றனவாம். மலைகள் சுழல, மலை கலங்கினும் நிலை கலங்காத ஞான மலைகளின் எண்ணங்களும் சுழல்கின்றனவாம். அலைகடல் சுழல, ஞானக் கடலாகிய வேதமும் சுழல்கின்றதாம். பூவுலகத்தின் கண்ணான சூரிய சந்திரர் சுழல, படைப்புக் கடவுளின் கண்களும் சுழல்கின்றனவாம். ஏன்?

எல்லையற்ற பரம்பொருளின் — தொல்லைமூலத் தருமச் சுடரின் — அதிகார முத்திரை தரித்துத் தருமத்தை நிலைநிறுத்தவும், அதர்மத்தை அழிக்கவும் வந்திருக்கிறான் ராமன், அழகு சுமந்த நீலமேனி நெடியவனாகி. 'ஸாக்ஷாத் தர்மம்' ஆகிய இவனுடைய உள்ளமே குழம்பிச் சுழன்றதென்றால், உலகத்தில் உண்டாகும் அதர்மக் குழப்பத்திற்குக் கேட்பானேன்? எல்லாம் மிச்சமில்லாமல் அழியப் போகும் காலம், எல்லாப் பொருள்களும் மூலப் பொருளான பரம்பொருளுடன் லயித்து முற்றுப் பெறப்போகும்



அந்த ஊழிக்காலமே வந்து விட்டதுபோல், மேலது கீழாய்க் கீழது மேலாய்ச் சுழலத் தொடங்கி விடுகிறதாம் உலகமெல்லாம்.

கம்பனும் பாரதியாரும்

இப்படி ஒரு சந்தர்ப்பத்தைப் பாரதியாரும் தமது இதிகாசத் துணுக்காகிய 'பாஞ்சாலி சபத'த்தினிடையே கற்பித்துக் கொண்டு 'ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்ப'த்தை வருணித்திருக்கிறார். பாஞ்சாலியைத் துரியோதனன் தகிலுரியச் சபைக்கு அழைத்து வரச் சொன்னதும் விண்ணும் மண்ணும் திகைத்துச் சுழல்கின்றனவாம்.

தருமம் அழிவெய்தச்
சத்தியமும் பொய்யாக

என்று தொடங்குகிறது பாரதியாரின் கற்பனை.

வானத்துத் தேவர்
வயிற்றிலே தீப்பாய
மோன முனிவர்
முறைகெட்டுத் தாம்மயங்க,

என்று பாரதியார் கூறுவது, 'மதியோர் எண் சுழன்றது' என்ற கம்பன் கூற்றை நினைப்பூட்டுகிறது.

வேதம் பொருளின்றி
வெற்றுரையே ஆகிவிட,
நாதம் குலைந்து
நடுமையின்றிப் பாழாக

என்ற பாரதி வாக்கு, 'வேதமும் சுழன்றது' என்ற கம்பன் வாக்கை ஞாபகப்படுத்துகிறது. நான்முகனார் நாவடைப்பும், நாமகளின் புத்திக் கேடும், 'விரிஞ்சன் கண் சுழன்றது' என்ற கம்பன் வருணனையை நினைப்பூட்டுகிறது. சூரியன் முகத்தில் இருள் படர்வது, 'சுழன்றது கதிரொடு மதியும்' என்பதை நினைப்பூட்டுகிறது.

'பாஞ்சாலி சபத'த்தில் 'உலகக் குழப்ப'த்திலிருந்து கவனத்தை மறுபடியும் கதைக்குத் திருப்புவதற்காக, 'அடபடிச் சூரிய தேவனின் முகத்திலும் இருள் படர்ந்த அந்த வேளையில், அகத்தே இருளுடைய துரியோதனன அந்த "உலகக் குழப்ப"த்தைச் சிந்தனையால் தொட்டுவிட்ட ஞான விதுரனை நோக்கிப் பாஞ்சாலியை அழைத்து வரச் சொல்லுகிறான்' என்கிறார் பாரதியார். கம்பனுடைய இந்தச் சந்தர்ப்பத்திலே,

மேல கீழுறக்
கீழன மேலுறும்

என்ற இந்த வேளையிலே, கீழே பார்த்துக் கொண்டிருப்பது போல் 'உலகக் குழப்ப'த்தைச் சிந்தையால் கீழும் மேலும் தொட்டு நின்ற ராமனுடைய அந்தச் சிந்தையை லட்சுமணன் எதிரே நிலத்தில் பதிந்து கிடக்கும் ராவணனுடைய தேர்ச் சக்கரங்களின் சுவடுகளை நோக்கித் திருப்பி விடுகிறான்.

* * *

தருமக்கோயிலில் பாஞ்சாலி ஜானகிக்குமட்டுமா, பஞ்சை மகளிர்க்கும் மைந்தர்க்கும் கதவடைப்பு நேர்ந்தாலும், 'நான்முகனார் நாவடைப்பு' முதலான உத்பாதங்கள் சூட்சுமமாக நிகழ்ந்த 'அதர்மக் குழப்பம்' உலகில் ஏற்படும் என்பது குறிப்பு.



303. 'நெடுமரம் போல் நின்றேனே!'

தேர்த்தடத்தையும் பார்த்துக் கொண்டார்கள். சீதையைக் கவர்ந்தவர் தீண்டுதற்கு அஞ்சித் தரையோடு பேர்த்தெடுத்திருப்பதையும் பார்த்தார்கள். 'வீணாக நின்று சிந்தையிலாழ்வது செயல் அன்று, வலிமையன்று' என்கிறான் இளையவன். தேர் நெடுந்தூரம் போய்விடுவதற்கு முன் விரைந்து தொடர்ந்து போய் மறித்துக் கொள்வோம் என்கிறான். ராம லட்சுமணர் தேர்த்தடத்தின் வழியே தீவிரமாய்ச் சென்று பார்க்கிறார்கள்.

கவலையும், காட்சியும்

வழியில் வீணைவடிவமான ஒரு தேர்க்கொடி ஒடிந்து கிடப்பதைப் பார்க்கிறார்கள். ஆயுதத்தினால் ஒடிக்கப்படவில்லை என்று ஊகிக்கிறான் ராமன். 'ஏதோ, ஒரு பெரும் பறவையின் மூக்கினால் முறிக்கப்பட்டிருக்கவேண்டும். உன் தந்தை ஜடாயுவைத் தவிர வேறு யாரோ அவ்வளவு வலிமை கொண்டு தாக்கியிருக்கக் கூடும்?' என்கிறான் இளையவனை நோக்கி: 'ஐயோ, அதிவயோதிகரல்லவா? சீதையைக் கவர்ந்து சென்ற சத்ருவுடன் போர் செய்திருக்கிறாரே!' என்று கவலையோடு கண்ணீர் வடிக்கிறான் ராமன். தம்பியோ, 'பெரியப்பா துரத்திக் கொண்டே போயிருக்கக்கூடும். எங்கேயாவது எதிரியைத் தடை செய்துகொண்டிருக்கவும் கூடும். நாமும் போய்ச் சேர்ந்து விட்டால் நம் பெரியப்பாவுக்கே வெற்றி கிடைத்தாலும் கிடைக்கும்' என்கிறான்.

இருவரும் வெகு வேகமாய்ப் போகிறார்கள். கொஞ்ச தூரம் போனதும் ஒரு பாரமான வில் முறிந்துகிடப்பதையும் பார்க்கிறார்கள். வில்லின் வலிமையையும், அதை ஒடித்தவர் வலிமையையும் வியந்து கொண்டே

மேலும் வேகமாய்த் தொடர்ந்து போகிறார்கள். ஒரு பெரும் போர் நடந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கத தக்க பல அடையாளங்களைக் காண்கிறார்கள். பல கிரீடங்களும் தோளணிகளும் விழுந்து கிடப்பது கண்டு ராமன் தம்பியை நோக்கி, 'ஜடாயுவுடன் போர் செய்தவாகள் பலர் !' என்கிறான்.

கடைசியாக ராமன் ஓடிப்போய், இரத்த வெள்ளத்திலே கிடக்கும் ஜடாயுவைப் பார்த்து விடுகிறான். பார்த்து நிற்கவா முடிகிறது ?

துள்ளி ஓங்குசெந் தாமரைக்
கண்கள்நீர் சொரியத்
தள்ளி, ஓங்கிய அமலன், தன்
தனிஉயிர்த் தந்தை
வள்ளி யோன்திரு மேனியில்,
தழல்நிற வண்ணன்
வெள்ளி ஓங்கலில் அஞ்சன
மலையென, வீழ்ந்தான்.

[அமலன் - ராமன். தன் தனி உயிர்த் தந்தை வள்ளியோன் - ஒப்பற்ற தன் உயிர் போன்ற தந்தையும் வண்மைக் குணமுள்ளவனுமாகிய ஜடாயு. தழல் நிறவண்ணன் - சிவ பெருமான். வெள்ளி ஓங்கல் - வெள்ளி மலை. அஞ்சன மலை - நீலமலை.]

பிரலாபம்

வெண்ணிறப் பெருங்கழுகான ஜடாயுதன் உடம்பில் இரத்தத்துடன் காணப்படுவதற்குத் தழல் நிற வண்ணனுடைய வெள்ளிமலை உவமிக்கப் பெற்றிருக்கிறது. அந்த வெள்ளி மலை மீது நீலமலை போல் விழுந்து விடுகிறானும் ராமன். கண்மூடி மூச்சின்றி நெடுநேரம் மூர்ச்சித்துக் கிடக்கிறான். தம்பி அருகேயுள்ள அருவிநீர் கொண்டுவந்து தெளிக்கத் தெளிந்து புலம்புகிறான் அண்ணன் :

தந்தா தையரைத்
தனயர் கொலைநேர்ந்தார்
முந்தாரே யுள்ளார் ?
முடிந்தானே முனையொருவன் ;
எந்தாயோ ! எற்காக
நீயும் இறந்தனையோ ?
அந்தோ, வினையேன்
அருங்கூற்றம் ஆனேனே !

[முந்து ஆரே உள்ளார் — (எனக்கு) முன் யார் இருக்கிறார். முனையொருவன் — முன்னமே ஒரு தந்தையாகிய தசரதன். எந்தாயோ. , என் தந்தையே. எற்காக - எனக்காக. அருங்கூற்றம் - தடுத்தற்கு அரிய யமன்.]

ஜடாயு செத்துப் போய் விட்டதாகவே நினைத்துப் புலம்பும் ராமனுக்குத் தன் உயிரும் கசந்து போகிறது. 'இரு தந்தையருக்கும் ஒருங்கே அருங் கூற்றமாகி விட்ட நானும் மாண்டவன்தான் !' என்று கூடச் சொல்லிவிடுகிறான். 'தாங்க முடியாத அவமானத்தால் உயிர் தானே போயிருக்க வேண்டும், அதுதான் இல்லையென்றால், தானே போக்கி

பிருக்க வேண்டும் தற்கொலை செய்துகொண்டு. அப்படியும் ஏன் மாண்டு போகவில்லையென்றால் அதற்கு உரிய அர்த்தக் காரணத்தையும் நினைப்பூட்டிக் கொள்கிறான். அதுதான் முனிவர்களின் குறை முடிப்பதாக விரதம் பூண்டிருப்பது. எனினும் 'தருமத்தை நிலைநிறுத்தி உங்களைக் காப்பாற்றுவதற்காக அதர்மத்தின் வேரை அறுத்து விடுவேன. நீங்கள் பயப்பட வேண்டாம்' என்று அபயம் கொடுத்த அந்தத் தெய்வீக உத்ஸாகமும் இப்போது மங்கிப் போய்விட்டது.

சிஷ்ட பரிபாலனத்திற்காகக் கிடைத்திருக்கும் இந்த 'அவதார'ப் பெரும் பிறவியும் 'மாமாயப் புன் பிறவி' போலவே கசந்து போகிறது :

மாண்டேனே யன்றோ ?
 மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரதம்;
 அதனால் உயிர்பொறுப்பேன்.



நீண்டேன் மரம்போல
நின்றொழிந்த புன்தொழிலேன்,
வேண்டேன் இம் மாமாயப்
புன்பிறவி வேண்டேனே!

[மறையோர் - மறைகளில் வல்லவர்களான முனிவர்கள். முடிப்பான் - முடிக்கும் பொருட்டு. நின்று ஒழிந்து - (வளர்ந்து) நின்று பயன் பெறாத. புன்தொழிலேன் - ஈனத் தொழிலை உடைய நான்.]

துக்கம் இசந்து மேலும் பொங்குகிறது. தன் மனைவியைக் காப்பாற்ற வேண்டுமென்று பெரியப்பா தம் முதிர்ந்த கிழப் பருவத்தில் தம் உயிரையும் தியாகம் செய்து விட்டாரே என்ற நினைப்பும், கொலையுண்டு கிடக்கும் நிலையும், கொலைஞன் அந்த வெற்றிப் பெருமையால் தோள்பூரிக்க நிற்பதும், தன்னுடைய வீரத்தைப் பழிக்கின்றனவாம்; தான் இப்போது நிற்கும் நிலையைப் பரிகசிக்கின்றனவாம். வில்லும் அம்புகளும் இப்போது தாங்க முடியாத சுமையாகத் தோன்றுகின்றன. மனிதன் சுமக்கும் சுமையல்ல,— மரம் சுமக்கும் சுமைபோல்:

என்தாரம் பற்றுண்ண,
ஒன்றாயைச் சான்றோயைக்
கொன்றானும் நின்றான்;
கொலையுண்டு நீகிடந்தாய்;
வன்றாட் சிலையேந்தி
வாளிக் கடல்சுமந்து
நின்றேனும் நின்றேன்,
நெடுமரம்போல் நின்றேனே!

[பற்றுண்ண — பிடிபட. ஒன்றாயை — எதிர்த்த உன்னை. சான்றோயை — பெரியோனாகிய உன்னை. வன்றாட் சிலை = வல் + தாள் + சிலை — வலிய தண்டத்தையுடைய வில். வாளி — பாணம்.]

ஓர் உணர்ச்சிக் கடல் இந்தப் பிரலாபப் பாட்டு. 'என் தாரத்தையும் பாதுகாக்கத் தவறி விட்டேனே, தருமத்தைப் பாதுகாக்க முற்பட்ட நான்!' என்ற வெட்கம், பச்சாத்தாபம் ஆகிய அலைகள் ஒரு புறம். அவளை மீட்க வேண்டுமென்று போரிட்டு உயிர்த் தியாகம் செய்த பெரியப்பாவுக்கு நன்றியறிவு, அன்பு, பக்தி முதலான உணர்ச்சியலைகள் ஒரு புறம். அந்தப் பெருங்கிழவனாரின் அந்தக் கொடுங் கொலைக்குப் பரிதாபம், துக்கம் முதலான அலைகள் ஒருபுறம். அத்தகைய கொலை பாதகனைத் தான் கொல்லாமைக்கு மானம், கோபம் முதலான உணர்ச்சி அலைகள் ஒருபுறம். இந்த அநியாயங்களுக்கெல்லாம் ஒரு பரிகாரமும் செய்யாது சும்மா நின்று கொண்டிருப்பதற்காகத் தன்னைத்தானே பரிகசிப்பதும் இழித்துரைப்பதும் வெறுத்துக் கொள்வதுமாகிய உணர்ச்சியலைகள் ஒருபுறம். ராமனுடைய இதயத்திலே பெருகி மோதும் இத்தனை உணர்ச்சிகளும் ஒரே சிறு பாட்டில் சாதாரண தமிழ்ச் சொற்கள்மூலமாக நம் இதயத்திலே உணரப்படுகின்றன.

இப்படியே லட்சுமணனும் அழுது வருந்துகிறான். இப்போது ஜடாயுவுக்கு உள்ளத்தில் சிறிது உணர்ச்சி தோன்றுகிறது. துன்பத்தோடு பெருமூச்சு விட்டுக்கொண்டே மெள்ளக் கண்திறந்து பார்க்கிறான்.



304. ஜடாயு வாழ்த்து

ராமன் பிரலாபிக்கத் தம்பியும் அழுது அலற, அந்த அழுகுரல்கள் கேட்டு மெள்ளக் கண் திறந்து இருவரையும் பார்த்து இதயம் குளிர்ந்த ஜடாயு, இழந்த சிறகுகளையும் உயிரையும் அகில லோக ஸாம்ராஜ்யத்தையும் ஒருங்கே பெற்றவன் போல் பெருமகிழ்ச்சி யடைந்தான் :

இற்ற இருசிறகும்
இன்னுயிரும் ஏழுலகும்
பெற்றனனே ஒத்தான் ;
'பெயர்த்தேன் பழி' என்றான்.

இன்னுயிர் பெற்றவன்போல் ஜடாயு மகிழ்ச்சியடைந்தபோதிலும், இந்தப் புதல்வர்களுக்காக இந்தக் கிழவயதிலும் இந்த நிலையிலும் இந்த உயிர் இனிமையானதுதான் என்றுகூட நினைத்துக்கொண்டபோதிலும், 'இனிமேல் பிழைத்திருக்க முடியாது' என்பது தெளிவாகிறது. சாவுக்கும் நோவுக்கும் அஞ்சுகிறவனா ஜடாயு? பழி என்ற அந்த ஒரு நோய்க்குத்தான் அஞ்சினான். இப்போது, ராவணனை வென்று சீதையை மீட்டுக் கொள்ள வில்லையே என்ற அந்தப் பெரும் பழி தீர்ந்துபோயிற்று. அவர்கள் வெற்றி பெற்றுச் சீதையை மீட்டுக் கொள்வார்கள் என்பதில்தான் சந்தேகம் துளியும் கிடையாதே. இந்த நிலையில் இன்றே தன் உயிர் போய் விடும் என்ற எண்ணமும் ஏற்படுகிறது.

பாக்கியசாலியும் புண்ணியவான்களும்

'**எ**ன்ன பாக்கியம் செய்தேன்!' என்கிறான், இதே நிலையில். ராம லட்சுமணரைக் கண்ட பாக்கியம்தானா? பாட்டிலே பார்த்துவிடுவோம் :

'பாக்கியத்தால் இன்றென்
பயனில் பழியாக்கை
போக்குகின்றேன், கண்ணுற்றேன்
புண்ணியரே! வம்மின்' என்று,
தாக்கி அரக்கன்
மகுடத் தலைதுமித்த
மூக்கினால் உச்சி
முறைமுறையே மோக்கின்றான்.

[யாக்கை — உடம்பு. வம்மின் — (அருகே) வாருங்கள். மகுடத் தலை துமித்த — கிரீடத் தலைகளைத் துண்டம் செய்யமுயன்று கொத்திக் கொத்திப் படாத பாடுபடுத்திய. முறை முறை — மாறி மாறிப் பலமுறை.]

ராம லட்சுமணரைப் பார்த்ததும் பழிதீர்ந்த உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. எனினும், ராவணனை வென்று சீதையை மீட்டுக்கொள்ள உதவாததால் தன் உடம்பைப் 'பயனில் பழியாக்கை' என்றே கருதுகிறான். 'இத்தகைய உடம்பு இன்று போய்விடும்; இந்த உடம்போடு பழியும் போய்விடும். ஆகவே நான் பாக்கியசாலி' என்கிறான், தன்னுடைய மரணத்தைப் பதறாது மனம் சிதறாது நினைத்துப் பார்த்ததும். தியாக மரணம் அடைகிறவர்களின் மனநிலையைத்தான் எவ்வளவு அழகாய் வெளியிடுகிறான் கவிஞன்! இப்படி உயிர்போகும் சந்தர்ப்பத்தில், 'பிள்ளைகளையும் பார்க்கக் கிடைத்ததே! நான் பாக்கியசாலிதான்; சந்தேகமே இல்லை' என்று மகிழ்ந்து போகிறான் ஜடாயு.

'நானும் பாக்கியசாலி; நீங்களும் புண்ணியவான்கள்' என்கிறான். 'இந்தக் கழுகுக் கண்களால் பார்த்துவிட்டேனே உங்கள் புண்ணிய மேனியை' என்கிறான். 'பக்கத்திலே வாருங்கள்' என்ற அழைப்பிலே தான் எவ்வளவு புத்திர வாத்ஸல்யம்! இந்தப் புத்திர வாத்ஸல்யத்தின் மகுடமாக வருகிறது,

தாக்கி அரக்கன்
மகுடத் தலைதுமித்த
மூக்கினால் உச்சி
முறைமுறையே மோக்கின்றான்

என்பது.

அரக்கன் உச்சியை வன்மையாகச் சினந்து தாக்கிய அதே மூக்கு, இப்போது புதல்வர் உச்சியை மென்மையாக அன்புடன் மோக்கின்றதாம். இறந்த காலத்தில் சொல்லாமல் "மோக்கின்றான்" என்று அந்தப் புத்திர வாத்ஸல்ய நிகழ்ச்சி கண்முன் நிகழ்வது போல நிகழ்காலத்தில் சொல்லி, அதைக் கவி பார்த்துக் கொண்டே பேசுவது போல அமைந்திருக்கிறது கவிநயம்.

ஒரு கவிஞரை அவர் வருணித்திருக்கும் ஒரு காட்சி குறித்துக் கேட்டபோது, 'என் கண்முன் பாமண்டலம் முழுவதையும் அந்தப் பெரிய கடவுளையும் நான் பார்த்து விட்டதாகவே எண்ணினேன்' என்று பதில் சொன்னாராம். இங்கே ஜடாயு ராம லட்சுமணரை உச்சிமோந்த அன்புப் பெரு நிகழ்ச்சி குறித்து 'மூக்கினால் உச்சி முறைமுறையே மோக்கின்றான்'

என்ற அந்த நிகழ்ச்சியைத் தானும் கண்ணாரக் கண்டதாகவே கம்பன் சொல்லி யிருக்கக் கூடும்.

பிறகு பாக்கியசாலியான தந்தை குறைவில்லாத புண்ணியத்துடன் ஆற்றலும் வாய்ந்த மக்களை அருகே வைத்துக் கொண்டபடியே, கொஞ்சும் குரலில்,

'அஞ்சொல் மயிலை
அருந்ததியை நீங்கினிரோ
எஞ்ச லிலாஆற்றல்
இருவிரும்?' என்றுரைத்தான்.

[அஞ்சொல் மயில் — சாயலழகு பெற்றுக் குரலினிமை பெறாத மயிலொன்று அழகிய சொற்களும் பெற்று வந்தது போன்ற அழகியான சீதை. நீங்கினிரோ — நீங்கினீர்களோ. எஞ்சலிலா — குறைவில்லாத. இருவீரும் — நீங்கள் இரண்டு பேரும்.]

தருமப் பயிர் செய்து வாழ்வாய்!

லட்சுமணன் மூலமாகச் செய்தி தெரிந்துகொண்டு, ஜடாயு தேறுதல் சொல்லுகிறான். தீங்கு வந்து நேர்தலும் தீர்தலும் தொன்றுதொட்டு வருகின்ற விதியின் செயல் என்று சொல்லிவிட்டு அதற்காகச் சிந்தையைத் தவிக்கவிடுவது பேதைமை என்கிறான்.

இந்தப் பெருந் துன்பத்தின் உட்பொருளையும் ஜடாயு ஒருவாறு ஊகித்துப் பேசுகிறான்:



பிள்ளைச்சொற் கிளிய ளைப்
பிரிவுறல் உற்ற பெற்றி,
தள்ளுற்ற அறமும் தேவர்
துயரமும் தந்த தேயால்;
கள்ளப்போர் அரக்கர் என்னும்
களையினைக் களைந்து வாழ்தி,
புள்ளிற்கும் புலனில் பேய்க்கும்
தாய்அன்ன புலவு வேலோய்!

[பிள்ளைச் சொற்கிளியனாள் - இனிய மழலைச் சொற்களைச் சொல்லுவதில் கிளி போன்ற சீதை. பிரிவுறல் உற்ற - பிரிதலாகிய. பெற்றி - தன்மை. தள்ளுற்ற - தள்ளப்பட்ட. வாழ்தி - வாழ்வாயாக. புள்ளிற்கும் - பறவைகளுக்கும். புலனில் பேய்க்கும் - அறிவில்லாத பேய்களுக்கும். தாய் அன்ன - தாய் போன்ற. புலவு வேலோய் - (பகைவர்) தசை தோய்ந்த வேல்.]

அரக்கர்கள் தருமத்தைக் குப்புறத் தள்ளினார்களாம். தேவர்களையும் துயரப்படுத்தினார்கள். அந்த அறம் தான் மீண்டும் நிற்கவேண்டி, இந்தத் துயரம் தான் நீங்கவேண்டி, ராவணனுக்கு மேலும் மேலும் கெட்ட புத்தியைக் கொடுத்துச் சீதையின் பிரிவையும் விளைத்திருக்கின்றனவாம். 'இந்த உட்பொருளை உய்த்துணர்ந்து, ராட்சஸக் களைப்பூண்டுகளைக் களைந் தெறிந்து அறப்பயிர் வளர்த்த ராமா! நீ சீதாராமனாக வாழ்வாயாக' என்று வாழ்த்துகிறான் ஜடாயு. சீதாராமனுடைய வாழ்வு அறத்திற்கும் நல்வாழ்வு, அமரர்க்கும் அமரவாழ்வு, உலகத்திற்கெல்லாம் உத்தமவாழ்வு என்பது குறிப்பு.

இப்படி ராமனை வாழ்த்தும் ஜடாயு, அத்தகைய பெருவாழ்விற்கு முன் நடைபெற வேண்டிய பயங்கரப் போர் நிகழ்ச்சிகளையும் மனக்கண்ணால் காண்கின்றான். கள்ளப் போர் அரக்கர்கள் வாழ்விழந்து வலியிழந்து உயிரிழந்து கிடக்கும் போர்க்களம், நெருங்கி வரும் மரணத்தால் பஞ்சடைந்து கொண்டிருக்கும் கழுகுக் கண்களுக்கு எதிரே ஓடி வருகிறது,—அறமில்லாத அந்த அரக்கர்களைப் பட்சிக்கும் அறிவில்லாத பேய்களுடனும், கழுகு முதலான பட்சி ஜாலங்களுடனும். அந்தக் கழுகுகளும் பேய்களும் "தாயே?" என்று வாழ்த்துமாம் தங்களுக்கு அவ்வளவு உணவு தந்த ராமனுடைய வேலாயுதத்தை நோக்கி, — தான் இப்போது ராமனை வாழ்த்துவது போல.

கழுகுகளுக்கும் பேய்களுக்கும் ராவணாதி ராட்சஸர் விருந்தாவர் என்ற இந்த நினைப்பு ஏதோ பழக்குப் பழி வாங்குவது போன்ற ஒருணர்ச்சியைத் தோற்றுவித்திருக்க வேண்டும் ஜடாயுவக்கு. ஆனால் இந்த உணர்ச்சி உள்ளத்தின் மேற்பரப்பிலேதான். ஆழத்திலே கிடக்கும் உணர்ச்சிப் பெருக்கோ 'அறப் பயிர் விளைக்க வந்திருக்கிறான் அறத்தின் மூர்த்தி' என்ற உண்மையை உணர்ந்து ராமனுக்கும் உணர்த்தி, அவதார மூர்த்தியை அவதார காரியத்தில் ஈடுபடுத்தப் பார்க்கிறது.

கம்பனுக்கு ராமகதை 'இராமாவதாரம் தானே?'



305. தெய்வ மரணம்

'தருமப் பயிர் செழித்து வளர ராட்சஸக் களை களையப்பட வேண்டு மல்லவா? அதற்கு தெய்வாய்க் கேடு போல வந்த ஆக்கம் தான் சீதையைப் பிரிய நேர்ந்ததும்' என்று ஜடாயு தத்துவ ஞானம் பேசினான். ஆனால் அது சோகத்திற்கு மருந்தாகுமா? எனவே பயங்கரமான போர் நிகழ்ச்சிகளை நினைப்பூட்டி ராமனுடைய தர்மாவேசத்தையும் தூண்டி விட்டான்.

'இன்றைய செய்தி'

கடைசியாக, 'ராவணன் சீதையை எடுத்துச் செல்லும்போது எதிர்த்துத் தடுத்த என் சிறகுகளை வெட்டித் தள்ளி விட்டான். இது இன்றைய செய்தி' என்று சொல்லி, ராமனைச் சீதையைத் தேடும் முயற்சியில் உடனே செலுத்த விரும்புகிறான்:

'வடுக்கண்வார் கூந்த லாளை
  இராவணன் மண்ணி னேடும்
எடுத்தனன் ஏகு வானை
  எதிர்ந்(து)என(து) ஆற்றல் கொண்டு
தடுத்தனென் ஆவ தெல்லாம்;
  தவத்(து)அரன் தந்த வாளால்
படுத்தனன்; இங்கு வீழ்ந்தேன்;
  இதுஇன்று பட்ட தெ'ன்றான்.

[வடுக்கண் — மாவடுவின் உட்பிளவு போன்ற கண்கள். வார் — நீண்ட. தவத்து — தவத்தின் பயனாக. அரன் — சிவபெருமான். படுத்தனன் — அழித்தான். பட்டது — நிகழ்ந்தது.]

சீதையை ராவணன் மண்ணோடும் எடுத்துக் கொண்டு போனான், என்ற தன் கருத்திற்குக் கவிஞன் ஜடாயு-சாட்சியை ராம லட்சுமணர் முன்பும் 'ஆஜர்' செய்வதைப் பாருங்கள்.

தீயும் பொறிகளும்

இந்த வார்த்தை தர்மாவேசத்தை மட்டுமா, கோபாவேசத்தையும் தூண்டிவிட்டது. சீதையை அபகரித்த அந்த அநியாயத்தைக் காட்டிலும், அந்த அநியாயத்தைத் தடுக்க முயன்ற பெரியப்பா ஜடாயுவுக்கு நேர்ந்த இந்த அநியாயம் அதிகமென்று இப்போது தோன்றுகிறது ராமனுக்கு. இந்த நிலையில் தெய்வ வீரனின் உள்ளத்திலே பொங்கும் கொடிய கோபங் குறித்து உலகமெல்லாம் நடுங்கிப் போகிறது. அத்தகைய கோபம் எப்படி வெளிப்படுகிறது பாருங்கள் :

'குறித்தவெங் கோபம் யார்மேல்
கொள்ளுறுங் கொல்?' என்(று) அஞ்சி
வெறித்துநின்(று) உலகம் எல்லாம்
விம்முறு கின்ற வேலை,
பொறிப்பிதிர் படலைச் செந்தீப்
புகையொடு பொடிப்பப், பொம்மென்(று)
எறிப்பதோர் முறுவல் தோன்ற,
இராமனும் இயம்ப லுற்றான்.

[யார்மேல் கொள்ளுறுங்கொல் — யார்மேல் செலுத்துவானோ. விம் முறுகின்றவேலை — கலங்குகின்ற வேளையில். பொறிப்பிதிர் படலை — தீப் பொறிக் கூட்டங்களின் தொகுதி. பொடிப்ப — எதிர்ப்பட்ட பொருள் களைப் பொடியாக்குவது போலத் தோன்றி எழ. எறிப்பது — வெயிலொளி வீசுவது. முறுவல் — (இங்கே) கோபச் சிரிப்பு.]

இப்படி முறுவலாக வெளிப்பட்ட கோபச் செந்தீயின் பொறிகள் சிதறி விழுவது போலவே கோப வார்த்தைகளும் புறப்படுகின்றன.

பெண்தனி ஒருத்தி தன்னைப்
பேதைவாள் அரக்கன் பற்றிக்
கொண்டனன் ஏக, நீ இக்
கோளுறக், குலுங்கல் செல்லா
எண்திசை இறுதி யான
உலகங்கள் இவற்றை, இன்னே,
கண்டவா னவர்க ளோடும்
களையுமா(று), இன்று காண்டி !

[பெண் தனி ஒருத்தி — தனியே துணையற்று நின்ற ஒரு பெண்ணை. பேதை வாள் அரக்கன் — அறிவற்ற கொடிய ராவணன். ஏக நீ இக் கோளுற — போக, அந்தப் போக்கைத் தடுத்த நீ இவ்வளவு வேதனை அடைய. குலுங்கல் செல்லா — குலுங்கிப் போகாமல் பார்த்துக் கொண்டிருந்த. இன்னே — இப்பொழுதே. காண்டி — காண்பாய்.]

என்பது போன்ற மூன்று பாடல்களில் வெளிப்படும் அந்தக் கோப வார்த்தை களின் கொதிப்பு அப்படியே உலகத்தைத் தீண்டி விடுமோ என்ற பிரமிப்பு ஏற்படுகிறது, சப்த ஜாலங்களைப் பாடி அநுபவிக்கும் போதே.

மறுபடியும் 'பித்ரு வாக்யம்'

ஜடாயுவின் வார்த்தைதான் இந்தக் கோபத்தையும் எதிர்த்துக் கண் டிக்கிறது. ராவணனுடன் போரிட்ட அதே தீரத்துடன் ராம கோபா வேசத்தையும் எதிர்த்துச் சாந்தப் படுத்துகிறான் ஜடாயு.



வம்பிழைக் கொங்கை வஞ்சி
வனத்திடைத் தமியள் வைகக்,
கொம்பிழை மானின் பின்போய்க்
குலப்பழி கூட்டிக் கொண்டீர்!
அம்பிழை வரிவிற் செங்கை
ஐயன்மீர்! ஆயுங் காலை
உம்பிழை யென்ப தல்லால்,
உலகம்செய் பிழையும் உண்டோ?

[வம்பு இழை — கச்சணிந்த. வஞ்சி — சீதை. தமியள் — தனித்தவளாய். வைக — தங்கியிருக்க. கொம்பு இழை — கொம்புகள் பொருந்திய. அம்பு இழை — அம்பு தொடுக்கின்ற. வரிவில் — கட்டமைந்த வில். ஐயன்மீர் — அருமை மக்களே. ஆயும் காலை — ஆராய்ந்து பார்க்கும்போது.]

என்று ஜடாயுவைத் தவிர வேறு யாரே பேசத் துணிவர்?

தசரதன் உத்தரவு செய்வது போலத் தோன்றுகிறதாம் ஜடாயுவின் இந்த வார்த்தை:

புயல்நிற வண்ணன், ஆன்(டு)அப்
புண்ணியன் புகன்ற சொல்லைத்
'தயரதன் பணியி தெ'ன்னச்
சிந்தையில் தழுவி நின்றான்,

'அயல்இனி முனிவ(து) என்னே?
அரக்கர்தம் வருக்கம் தீர்க்கும்
செயல்இனிச் செயல்'என்(று) எண்ணிக்
கன்னிய சீற்றம் தீர்ந்தான்.

[புயல் — மேகம். ஆண்டு — அப்பொழுது. அயல் இனி முனிவது என்னே — இனி அயலாரைக் கோபிப்பதில் என்ன பயன். கன்னிய சீற்றம் — (உலகத்தின்மீது) உள்ளத்தில் கருதிய கோபம்.]

'பித்ருவாக்ய பரிபாலனம்' செய்ய நாடு துறந்த ராமன், காட்டிலும் பித்ருவாக்ய பரிபாலனம் செய்து கோபம் துறந்தான் என்பது கருத்து.

திருடன் போனதெங்கே?

'ஒரு முக்கியமான கேள்வியை மறந்துவிட்டோமே நமது கோபத்திலே!' என்று நினைத்துப் பார்த்துக் கொண்டவன்போல் ராமன், 'அந்தக் கள்ள அரக்கன் எங்கே போனான் பெரியப்பா?' என்று கேட்கிறான். மூன்று லோகமும் ராவண மகாராஜ்யமானதால் எந்தத் திசையிலே சீதையைக் கொண்டுபோய்ச் சிறைவைத்திருக்கக் கூடும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? இந்தக் கேள்விக்குப் பீடிகையாக, 'அப்பா! "பொறுமையோடு இரு" என்று நீங்கள் கட்டளையிட்டபடியே நான் நடப்பதைத் தவிர எனக்கு வேறொரு செயலும் உண்டோ?' என்கிறான்.

இந்தப் பீடிகையுடன்கூடிய கேள்வியையும் அதற்கு இந்த 'அப்பா' சொல்லப் போகிற விடை என்ன என்பதையும் கவிதையில் கண்டு கொள்வோம்:

ஆயபின், அமலன் தானும்,
'ஐயநீ அமைதி' என்ன
வாயிடை மொழிந்த தன்றி
மற்றொரு செயலும் உண்டோ!
போயதவ் அரக்கன் எங்கே?
புகல்'எனப், புள்ளின் வேந்தன்
ஓய்வினன், உணர்வும் தேய
உரைத்திலன், உயிரும் தீர்ந்தான்.

[ஆய பின் — ஆனபின்; கோபம் தணிந்த பின். அமலன் — குற்றமற்ற ராமன். 'ஐய — தந்தையே. அமைதி — பொறுமையோடு இரு. புகல் — சொல்வாய். புள்ளின் வேந்தன் — பறவைகளின் தலைவனாகிய ஜடாயு. ஓய்வினன் — தளர்ச்சியடைந்தவனாய். உரைத்திலன் — விடை சொல்ல முடியாதவனாய்.]

ராமன் கேட்ட கேள்விக்கு விடை கூறுவதற்கு முன்னமே ஜடாயுவுக்கு இந்திரியங்கள் ஓய்ந்துபோகின்றன; உணர்வும் ஒடுங்கிவிடுகிறது. அவன் ஒன்றும் சொல்லாதவனாய் மரணம் அடைகிறான். பிள்ளைகளைப் பார்க்க வேணுமென்ற ஆசைதான் இந்த உயிரை இவ்வளவு நேரம் காத்தது!

'காட்டிலே சத்தியமூர்த்தியாகத் தந்தை உயிரைக் கொடுத்தார்!' என்று போற்றிவந்த ராமன் தியாகமூர்த்தியான காட்டுத் தந்தையின் மரணத்தைத் 'தெய்வ மரண'மென்றே போற்றுகிறான்.

ஜடாயுவின் மகத்தான தியாகம் ராமனது பிற்கால வாழ்க்கையை வசமாக்கி மலரச் செய்யும் ஓர் அற்புத லட்சியமாகிறது. தியாகமூர்த்திகளின் வாழ்க்கை, தெய்வ வாழ்க்கை; அவர்கள் மரணம் தெய்வ மரணமே யென்று தணிந்துரைக்கிறான் கவிஞன்.



306. கவிதையில் அவதாரம்

ஒரு சமயம் காந்தியடிகள் அமெரிக்கப் பாதிரியார் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது கிறிஸ்து பெருமானைக் குறித்துப் பின்வருமாறு தம் கருத்தை வெளியிட்டார்: 'கிறிஸ்தவர் வணங்கும் கிறிஸ்து பகவான், சரித்திரம் பிரஸ்தாபிக்கும் சாதாரண ஏசு கிறிஸ்து அல்ல. உலகத்திலே பகவான் கொண்டு உலாவிய உருவம் என்பர் கிறிஸ்துவைக் கிறிஸ்து பக்தர்கள். அதே மாதிரி நானும் என் கற்பனையில் தோன்றும் கண்ணனைக் கடவுளாக மதிக்கிறேன். என் கருத்திலுள்ள கண்ணபிரானுக்கும் கதைகளில் வருணிக்கப்படும் கண்ணபிரானுக்கும் வேற்றுமைகள் உண்டு......மனோலயத்தில் உதிக்கும் அவதாரங்கள் சத்தியமானவை, நித்தியமானவை. இது காந்தியடிகளின் ராமனுக்கும் பொருந்தும். ஸாராம்சத்தில் கம்பனுடைய ராமனுக்கும் பொருந்தும் என்பது என் அபிப்பிராயம்.

அகக்கண்ணும் அவதாரமும்

கம்ப-ராமன் சரித்திர ராமனல்ல; வால்மீகி ராமனுமல்ல. உத்தம புருஷனாகவும் பக்தர்களின் புருஷோத்தமனாகவும் ஒருங்கே காட்சி வழங்குகிறான் கம்பனின் அகக்கண்ணுக்கு. ராம பக்தர்களின் மனோலயத்தில் அவதரித்த அவதாரமே கருத்திலும் இறங்கிக் கற்பனையில் கனிந்து அகக்கண்ணுக்கு முன் நின்று கவிதையில் வெளிப்படுகிறது, இம் மகாகவி கண்ட சத்திய நித்திய வஸ்துவாக. ஓர் உதாரணமாக, ஜடாயு மரணமடையும்போது ராமனை எப்படிப் பார்த்தான், பாருங்கள்:

வேதங்கள் காண்கி லாமை
வெளிநின்றே மறையும் வீரன்

பாதங்கள் கண்ணிற் பார்த்தான்,
படிவங்கொள் நெடிய பஞ்ச
பூதங்கள் விளியும் நாளும்
போக்கிலா உலகம் புக்கான்.

[காண்கிலாமை—காண முடியாமல். வெளி நின்றே—அப்பால் நின்று. படிவம்—வடிவம். நெடிய பஞ்ச பூதங்கள்—(நிலம் நீர் தீ காற்று வானம் என்னும்) ஐம்பெரும் பூதங்கள். விளியும்—அழிந்து போகும். நாளும்—நாளிலும்; காலத்திலும். போக்கிலா—அழிந்து போகாத. உலகம்—(இங்கே) பரமபதம். புக்கான்—அடைந்தான்.]

ஐம்பொறிகளின் ஆதிக்கம் ஒய்ந்து புறவுணர்வு தேய்ந்து போக, ஜடாயுவின் அகக்கண் விழித்துக்கொண்டு, புறக்கண் கண்ட புத்திர சிகாமணியைப் புருஷோத்தமனாய்ப் பரமபத நாதனாய்க் கண்ணுற்றுக் கதிபெறுகின்றதாம். ஆனல். அந்தப் புருஷோத்தமனே சாதாரண மனிதன்போல் அழுதுசோர்கின்றான் தம்பியுடன், அந்தக் காட்டிலே. ராம லட்சுமணர் மட்டுமா துக்கம் அடைகிறார்கள்? இந்த மரணம் அழுகையை மட்டுமா தூண்டுகிறது? காடெல்லாம் அழுகிறதாம். உலகமெல்லாம் தொழுகிறதாம்.

ஆடவர்க்(கு) அரச !னோடு
தம்பியும் அழுது சோரக்,
காடமர் மரமும் மாவும்
கற்களும் கரைந்து சாய்ந்த;
சேடரும் பாரு ளோரும்
கரம்சிரம் சேர்த்தா ரன்றே !

[ஆடவர்க்கு அரசன்—புருஷோத்தமனான ராமன். காடு அமர்—காட்டில் பொருந்திய. மா—மிருகங்களும் பறவைகளும். சாய்ந்த—சாய்ந்தன. சேடர்—(கீழுலகத்திலுள்ள) சேஷர்கள் அல்லது நாகர்கள். பாருளோர்—பூமியிலுள்ளவர்கள்.]

உலகத்தில் உத்தம வாழ்க்கை வாழ்கிறவன் 'வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார் திருவள்ளுவர். ராமனுடைய வாழ்க்கையை, காந்தியடிகள் வாழ்ந்தது போன்ற வாழ்க்கையைத் தெய்வ வாழ்க்கையென்பர். கம்பனே காந்தியடிகளின் மரணத்தையும் 'தெய்வ மரணம்' என்று போற்றுவான். ஜடாயுவின் தியாக மரணத்தை கம்ப—ராமனே இப்படிப் போற்றுகிறான், யுத்த காண்டத்திலே. தியாக மரணம் அழுகையோடு தொழுகையும் தூண்டுகிறது உலகத்திலே. ஆனல் ராமனுக்கோ இப்போது சோகம்தான் அதிகமா யிருக்கிறது. 'மனைவியை இழந்து மானம் கெட்டேன்; தந்தையையும் பறிகொடுத்தேனே!' என்று பிரலாபிக்கிறது இருதயம். அவதாரத்தை மறைக்கிறது மானுடச் சட்டை:

'இறந்தனன்; இருந்து ளேன்யான்;
என்செய்கேன்? இளவல்!' என்றான்.

[இளவல்—தம்பி.]

குறுதிசய வளர்ச்சி

'பெற்ற தாதை இறந்தனன்!' என்றே பிரலாபிக்கிறான். தன்னைப் பிரிந்ததால் இறந்து போன தசரதனுடைய ஞாபகமும் வரத்தான் செய்

கிறது. அவ்வளவு அருமையுடன் தன்னைப் புதல்வனாக நேசித்த இந்த ஜடாயுவையும் 'பெற்ற தாதை'யாகவே மதிக்கிறான் ராமன். 'இந்தத் தந்தையைக் கண்ட பின் அந்தத் தந்தையின் பிரிவைக் கூட ஒருவாறு சகித்துக் கொள்ள முடிந்தது; இதயம் ஒருவாறு ஆறுதல் பெற்றிருந்தது' என்பது குறிப்பு. இப்போது மனைவியின் பிரிவுத் துயரையும் மூழ்கடிக்கிறது ஜடாயுவின் பிரிவு. 'உலகம் துறந்து தவம் செய்யவே உட்கார்ந்து விடலாமா? அல்லது உயிரையே துறந்து விடுவேனோ? இந்த இரண்டில் எது செய்யத் தக்கது, தம்பி?' என்று கேட்கிறான்.

தம்பியோ, 'அந்த இரண்டுமே செய்யத்தக்கன அல்ல' என்கிறான்.

'நின்றினி நினைவ தென்னை?
நெருக்கிஅவ் அரக்கர் தம்மைக்
கொன்றபின் அன்றோ வெய்ய
கொடுந்துயர் குளிப்ப(து)?' என்றான்.

[குளிப்பது — மூழ்குவது.]

'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்' என்பர் திருவள்ளுவர். லட்சுமணனோ, கருமத்தைத் துறக்கும் தவமும் அவமே என்கிறான். 'சீதைக்காகவே துஷ்டநிக்கிரகம் நடைபெற வேண்டும்; அதற்காக இல்லாவிட்டாலும், கிழத் தந்தையான ஜடாயுவைக் கொன்றவனைக் கொல்ல வேண்டியது அவசியம்' என்கிறான். இந்தத் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனமாகிய அருந்தவத்தை விட்டு வேறு தவம் தாங்கள் செய்யத்



தக்க தன்று என்பதை எவ்வளவு அழுத்தமாக வற்புறுத்துகிறான்! தம்பியின் சித்த சக்திதான் இப்போது ராமனுக்கு ஆறுதல் அளிக்கிறது. மேலே நடக்க வேண்டிய சரமக்கிரியை குறித்துப் பேசுகிறான் ராமன்.

தந்தைக்குப் புதல்வன் செய்யவேண்டிய அந்திமக்கிரியை ஜடாயுவுக்கு ராமனால் செய்யப்படுகிறது. ராமனுடைய சகோதர தர்ம உணர்வும் சம தர்ம உணர்வும் இச்செயலாலும் வெளிப்படுகின்றன என்பது கவிஞன் குறிப்பு. பெரியநம்பி என்ற ஸ்ரீவைஷ்ணவப் பெரியார் ஹரிஜன வகுப்பினரான மாறனேர்நம்பிக்குப் புதல்வன் செய்யும் உரிமை செய்ததும், 'இப்படித் தாங்கள் செய்யலாமா?' என்று ராமானுஜரே கேட்டாராம். அதற்குக் குருநாதராகிய பெரியநம்பி, 'கழுகென்று பாராமல் ஜடாயுவையும் தந்தையாக மதித்துப் பெற்ற பிள்ளைபோல் பெருமாள் கிரியை செய்ய வில்லையா? ராமபிரானைக் காட்டிலும் பெரியவனோ நான்? ஜடாயுவைக் காட்டிலும் குறைந்தவரா மாறனேர்நம்பி?' என்று விடை அளித்து ஐயம் தெளிவித்தாராம்.

*　　*　　*　　*

ஜடாயுவுக்குக் கிரியை செய்து முடித்த ராமன் தம்பியுடன் ஜானகியைத் தேடிச் செல்ல விரும்புகிறான் அந்த வனத்திலே. சூரியாஸ்தமனமாகி விட்டது. இருவரும் கிரியை செய்து முடித்த அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்று ஒரு மலையை நெருங்குகிறார்கள். அப்போது அந்தி மயங்கி இருண்டு போகிறது. அந்த இருட்டு இப்போது சீதையைக் கவர்ந்து சென்ற அரக்கர்களை ஞாபகப்படுத்துகிறதாம்:

இந்திரற்(கு) அடங்கல் செல்லா
　　இராக்கதர் எழுந்த தென்ன.
வெந்துயர்க் கூற்றம் ஆய
　　விரியிருள் விங்கிற் றன்றே!

[அடங்கல் செல்லா - அடங்காத. வெந்துயர்க் கூற்றம் - கொடிய துயரமாகிய எமன். ஆய - ஆகிய. வீங்கிற்று அன்றே - வீங்கிக் காண்பது போல் மிகுதியாகத் தோன்றிற்று.]

இப்படி இருண்டு வரும்போதே மலையருவிகள் மங்கித் தெரிகின்றன, சோகம் படர்ந்த முகத்திலே கண்ணீர் வழிவது போல:

தேனுக அருவி சிந்தித்
　　தெருமரல் உறுவ போலக்
கானமும் மலையும் எல்லாம்
　　கண்ணினீர் உகுக்கும் கங்குல்.

[தேன் உக - தேன் வழிய. தெருமால் உறுவபோல - சோகத்தைத் தாமும் அடைவதுபோல. உகுக்கும் - வழியவிடும்; சொரியும். கங்குல் - இரவு.]

இத்தகைய கவிதையைப் பாடிப் பாடிப் பயின்ற பின்புதான் உண்மைத் தமிழ்க் கவிதை இன்னதென்று உணரப்படும். இத்தகைய கவிதையில் ரஸிகர்கள் கவிதா தேவியைச் சந்திக்கிறார்கள். கம்பனோ கடவுளின் அவதாரத்தையே கண்டு கொள்கிறான்.



307. பசியும், பசியும்

சந்திரோதயம் ஆயிற்று; நிலவும் இருட்டைப்போல் ராமனை மிகவும் வருத்தியது—அது கருநிற நஞ்சு, இது வெண்ணிற விஷம் என்று கருதும்படி. அவளையும் அவள் தனிமையையும் நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டான். அந்தத் தனிமையில் அவள் எப்படி ஏங்கி என்னென்ன செய்திருக்கக் கூடும் என்றெல்லாம் சிந்தனை ஓடியது:

'வாங்கு வில்லன்,
    "வரும்வரும்" என்(று)இரு
பாங்கும் நீள்நெறி
    பார்த்தன ளோ?' எனும்,
விங்கும் வேலை
    விரிதிரை யாம்என
ஓங்கி ஓங்கி
    ஒடுங்கும் உயிர்ப்பினன்.

[வாங்கு வில்லன்—வளைத்த வில்லை உடையவனாய். வரும்—வருவான். பாங்கு—பக்கம். நீள் நெறி—நீண்ட வழி. வீங்கும் வேலை—பொங்குகிற சமுத்திரம். விரி திரை — விரித்த அலைகள். உயிர்ப்பினன்—பெருமூச்சு உடையவன்.]

பித்தேறிய சிந்தனை

சிந்தனை பின்னோக்கி ஓடுகிறது ராமனுக்கு. 'கோர ரூபத்துடன் அரக்கன், "நில்லு நில்" லென்று பயமுறுத்தி நெருங்கியபோது சீதை என்ன நினைத்தாளோ?' என்ற ஆலோசனையில் இறங்கி விடுகிறது.

'நில்நில் என்று
    நெருங்கிய போ(து),அவள்
என்நி னைந்தன—
    ளோ?'என எண்ணுமால்.

'அரக்கர் கொடுமைக்கு நானும் அஞ்சி விட்டேனோ என்று கூடச் சீதையும் சந்தேகப்படுவாளோ?' இத்தகைய விபரீத சிந்தனை கூட ராம னுள்ளத்தை — அண்ணலின் ஆருயிரை — வெதுப்புகின்றதாம்:

மீண்டு மீண்டு
வெதுப்ப வெதும்பினன்,
'வேண்டு மோஎனக்(கு)
இன்னமும் வில்?'என்பான்.

வினோத விபரீத சிந்தனைகளால் பித்தேறியவன் போல் வில்லை நோக்கிச் சிரிப்பதும், தன் வீரத் தோள்களை நோக்கிச் சிரிப்பதுமாய் இருக்கிறான். 'உலகத்தைப் பாதுகாப்பேன் என்று துணிந்த நான் என் துணைவியையும் பாதுகாக்கத் தவறிவிட்டேன், நன்று நன்று என் வலிமை!' என்று வெட்கப்படுகிறான். இதே ரீதியில் அந்த இரவு ஊழிக்காலம் போல் நீண்டு கொண்டே போகிறது; போய் எப்படியோ முடிந்தும் போகிறது.

அழகும் அழிவும்

அருணோதயமாகிச் சூரியோதயம் ஆகும் சமயம். மயில்கள் ஆடிக் களிப்பதைப் பார்க்கிறான். மான்கள் மருண்டு துள்ளித் திரிவதையும், யானைகள் விளையாடுவதையும் பார்க்கிறான். ஆனல் ராமனுக்கு ஆறுதல் கிடைக்குமா?



மயிலும் பெடையும் உடன்திரிய,
மானும் கலையும் மருவிவரப்
பயிலும் பிடியும் கடகரியும்
வருவ திரிவ பார்க்கின்றான்,
குயிலும் கரும்பும் செழுந்தேனும்
குழலும் யாழும் கொழும்பாகும்
அயிலும் அமுதும் சுவைநீத்த
மொழியைப் பிரிந்தால் அழியாதோ?

[மானும் கலையும்—பெண்மானும் ஆண்மானும். மருவி வர—நெருங்கி வர. பயிலும்—பழகி விளையாடும். பிடி—பெண்யானை. கடகரி—மதம் கொண்ட யானை; (இங்கே) ஆண் யானை. அயிலும்—விரும்பி உண்ணப் படும். மொழி—மொழியையுடைய சீதை.]

இப்படியெல்லாம் ராமன் மனமழிய வருந்திக் கொண்டிருக்கும் நிலையில், 'சீதையைத் தேடிச் செல்லவேண்டும்' என்பதை இளையவன் நினைப் பூட்டி வற்புறுத்துகிறான். பிறகு, இருவரும் பல யோசனை தூரம் தேடிக் கொண்டே போகிறார்கள்: சூரியாஸ்தமனமாகி இருளும் மூடிக்கொள் கிறது. ஒரு சோலையில் பளிங்குக் கற்களால் ஆகிய ஓர் அறையைக் கண்டு அதில் தங்குகிறார்கள். அப்போது ராமன் தம்பியைத் தண்ணீர் தேடிக் கொண்டு வருமாறு அனுப்பிவைக்கிறான்.

ஆசையின் வந்த அரக்கி

அந்த இரவில் அந்தக் காட்டிலே தனியே திரியும் சிங்கம் போலச் சென்றுகொண்டிருந்த லட்சுமணனை அயோமுகி என்ற ஓர் அரக்கி கண்டு மோகித்துப் போகிறாள். 'ஆசையின் வந்த அயோமுகி' என்று தன்னை அவள் அறிமுகப்படுத்திக் கொண்டதும், லட்சுமணன் அவளைப் பயமுறுத்து கிறான். அந்த அரக்கியோ தன்னுடைய மாயையால் லட்சுமணனைத் தூக்கிக்கொண்டு போய் விடுகிறாள். தம்பி வாராதது கண்டு தமையன் தேடத் தொடங்குகிறான். தம்பியைக் குறித்துப் பலவாறு சிந்தித்துப் பரிதவிக் கிறான். தற்கொலை செய்துகொள்ளவும் தயாராகி விடுகிறான். ஆனால், அதற்குள் அரக்கியின் கூக்குரல் ராமன் காதில் விழுகிறது. அதிலிருந்து தம்பியின் நிலையை ஊகித்துத் துயரொழிந்து அவனை மீட்டுக்கொள்ள விரை கின்றான். தம்பியோ அரக்கியை அங்கபங்கம் செய்து தன்னை விடுவித்துக் கொண்டு, 'வருந்தாதே அண்ணா!' என்று சொல்லிக் கொண்டே எதிர்ப் படுகிறான். ராமன் ஆனந்தக் கண்ணீர் பெருகத் தம்பியைத் தழுவிக் கொள்கிறான்.

தம்பியை க்ஷேமமாகச் சந்தித்த குதூகலத்திலே ராமன்,

பிரிபவர் யாவரும்
பிரிக! பேரிடர்
வருவன யாவையும்
வருக!

[பேரிடர் – பெருந்துன்பங்கள்.]

என்று சொல்லி, 'என் துன்பமெல்லாம் உன்னால் நீங்குமேயல்லாமல் இனி என்னிடம் தங்குவதும் உண்டோ?' என்கிறான்.

பிறகு தம்பி அடிவருட ராமன் பள்ளி கொண்டும் உறங்க முடியாமல் அவஸ்தைப்பட்ட வண்ணம் இரவைக் கழிக்கிறான் என்பதாக முற்றுப் பெறு கின்றது 'அயோமுகிப் படலம்'. இந்தப் படலத்திற்கு ஆரணிய காண்டத்

துடன் அவயவ சம்பந்தம் இல்லை. ஆனால் ராமனுக்குத் தம்பியிடம் உள்ள பேரன்பை நன்கு வெளியிடுவதற்கு இக் கதையையும் ஒரு சந்தர்ப்பமாகக் கவிஞன் பயன் படுத்திக் கொள்கிறான்.

ஒரு கேலிச் சித்திரம்

அப்பால் ராமலட்சுமணர், கபந்தன் என்ற அரக்கன் வசிக்கும் வனத்திற்குப் போகிறார்கள். நடுப் பகல் :

எய்யும் சிலைக்கை இருவரும்சென்(று),
இருந்தே நீட்டி எவ்வுயிரும்
கையின் வளைத்து வயிற்றடக்கும்
கவந்தன் வனத்தின் கண்உற்றார்.

[சிலை - வில். வனத்தின்கண் உற்றார் – வனத்தை அடைந்தார்.]

கபந்தனுக்கு வயிற்றிலே வாய் என்பது கதை. ராட்சஸ நாகரிக ஏணியில் தாழ்ந்த படியில் இருப்பவன் இவன். இருந்த இடத்தில் இருந்தபடியே கைகளை நீட்டி வளைத்து எந்தப் பிராணியையும் வயிற்றுக்குள் அடக்கிக் கொள்ளும் திறமை உள்ளவன். எவ்வுயிரும் பட்சபாத மில்லாமல் பட்சிப்பவன். எறும்போ, யானையோ, மாடோ, மனிதனோ, கறுப்பனோ, சிவப்பனோ, பார்ப்பனனோ, அல்லாதவனோ எவ்வுயிரும் கபந்தனின் நீண்ட கைக்கு எட்டி விட்டால், அந்த வயிற்றுக்குள் அப்படியே பிரவேசமாக வேண்டியது தான்! இந்த விதமாகக் கபந்தேசுவரனின் வயிற்றிலே ஸமதர்மம், உதய மாகி விடுகிறதாம். ராட்சஸ உலகம் காணும் ஸமதர்மம் வேறு எப்படித் தான் இருக்க முடியும் ?

இந்தக் கபந்த–சித்திரத்தை இன்னும் கொஞ்சம் உற்று நோக்குவோம். வயிற்றிலே வாய் – ஆஹா, என்ன சௌகரியமான ஏற்பாடு! 'அவனுக்கு வயிறெல்லாம் வாய்!' என்கிறோம், ஒரு பேராசைப் பெருந் தீனிக்காரனைக் குறித்து. வயிற்றிலே வாய்படைத்த கபந்தனுக்கு, 'எதைச் சாப்பிடலாம், எதைச் சாப்பிடக்கூடாது?' என்று விவேகித்து அறிந்துகொள்ளவேண்டிய அவசியமே கிடையாது.

என், விவேகத்திற்கு இருப்பிடமான மூளையே கிடையாது! விவேகம் இல்லாதவனை, 'மூளை இல்லாதவன்' என்கிறோம். கபந்தனுக்கோ வயிற்றில் வாய் அமைந்து விட்டதால் மூளை மேல்மாடமாக அமைவதற்கு இடமே கிடையாது! எனவே, 'அது நன்மை, இது தீமை' என்ற விவகாரமே இல்லாமல் சாப்பிட்டுக் கொண்டே இருக்கலாம்.

இந்த ஆரண்ய காண்டத்தின் முகப்பிலே விராத - சித்திரத்தைக் கண்டோம்.

நன்று தீது நாடலேன்,
தின்று தீய தேடினேன்

என்பது விராத வைபவ ஸாரம். மூளை இருந்தும் அதைப் பேசாமடந்தையாக்கி விவேக சூனியம் ஆக்கிக் கொண்டவன் விராதன். கபந்தனுக்கோ இப்படியெல்லாம் மூளை சேட்டை செய்வதற்கே வழியில்லை. மேலும் பாருங்கள் : உணவை எடுத்து மேலே வாய்க்குக் கொண்டுபோய்க் கொடுக்க, அந்த உணவு கீழே வயிற்றுக்குத்தான் இறங்கி வரவேண்டி யிருக்கிறது – இந்த உபத்திரவம் இல்லையே கபந்தனுக்கு, வயிற்றிலேயே வாய் அமைந்து விட்டதால். 'கையின் வளைத்து' வயிற்றில் அடக்க வேண்டியதுதானே!



308. ரட்சகனைப் பட்சிக்கவா ?

கைகளை வீசிக் கவந்தன் பிராணிகளைத் திரட்டிச் சுருட்டும்போது அவை வலையிடைப்பட்ட மீன்கள் போலவும், கொடுங்கோல் அரசின் வசமான குடிகள் போலவும் நடுங்கி மயங்கிப் போயின. 'இது என்ன விபரீதமோ?' என்று ராம லட்சுமணர் திகைத்துக் கொண்டிருக்கும் போதே இவர்களும் அக் கைகளிடையே அகப்பட்டுக் கொண்டார்கள். 'எந்த மதிலுக்குள் எப்படி அகப்பட்டோம்?' என்றே முதலில் விளங்க வில்லையாம். இக் கைம் மதில்கள் நெருங்கி இடுக்கி போல் பிடித்து. இழுப்பதற்கு முன்பே ராம லட்சுமணர், கொடுமுடியிழந்த குன்று போல் நின்ற குண்டனுக்கு எதிரே போய் அந்தக் கவந்தக் காட்சியைக் கொஞ்சம் உற்று நோக்கினார்கள். வயிற்றிடை வாயன், புகை கக்கும் மூக்கன், நெருப்புச் சுவாலை போல் ஜொலிக்கும் நாக்கன், 'பாதகம் திரண்டு உயிர் படைத்த' மூர்க்கன் — என்றெல்லாம் உருவம் கண்டு, நரகத்தைச் சிரிக்கும் அந்த வயிற்றையும் கண்டார்கள்.

பூதாகாரமான இந்தக் கோரத்தை ஒரு பெரும் பூத மென்று கருதும் தம்பி சிறிது திகைப்புடன், 'அண்ணா, இப்போது என்ன செய்யலாம்?' என்று கேட்கிறான் :

அவ்வழி இளையவன்
அமர்ந்து நோக்கியே,
'செவ்விய தொருபெரும்
பூதம், வில்வலாய் !
வவ்விய தன்கையின்
வளைத்து வாய்ப்பெயும்;
செய்வதென் இவன்?' எனச்,
செம்மல் சொல்லுவான்

[அவ்வழி — அப்பொழுது. வெவ்வியது — கொடியது. வலாய் — வல்லவனை. வவ்விய — கவர்ந்த பிராணிகளை. பெயும் — பெய்யும்; போட்டுக் கொள்ளும். இவண் — இப்போது. செம்மல் — புருஷோத்தமனான ராமன்.]

வாழ்வு கசந்தது

ராமன் தந்த விடைதான் என்ன? 'துஷ்டநிக்கிரகம் செய்ய வந்த நாம் இந்த ஆவிப்பூதத்தையும் ஒழிக்கவேண்டியதுதான்' என்று சொல்லக் கூடுமென்றுதானே சாதாரணமாக எதிர்பார்க்கலாம்? ராமனோ, 'நான் இந்தப் பூதத்திற்கு இரையாகப் போகிறேன்!' என்கிறான். திடுக்கிடவேண்டாம்: காரணத்தையும் ராமனே சொல்லுகிறான் தம்பியிடம்—நாமெல்லாம் தெளிவாய்க் கேட்கும்படி:

'தோகையும் பிரிந்தனள்;
எந்தை துஞ்சினன்;
வேகவெம் பழிசுமந்(து)
உழல வேண்டலேன்;
ஆகலின் யான் இனி
இதனுக்(கு) ஆமிடம்!
ஏகுதி ஈண்டுநின்(று)
இளவலே!' என்றான்.

[தோகை - (இங்கே) சீதை. எந்தை - (இங்கே) தந்தையாகிய ஜடாயு. துஞ்சினன் - இறந்துவிட்டான். வேக வெம்பழி - உக்கிரமான கொடும்பழி.



வேண்டலேன் - விரும்புகின்றேனில்லை. ஆமிடம் - மாமிசம். ஏகுதி-போய் விடு. இளவலே - தம்பீ.]

சீதையைப் பிரிந்த வெம்பழியுடன் ஜடாயு - அப்பா துஞ்சிய வெம்பழியும் சேர்ந்து உக்கிரமான வெம்பழியாகி உள்ளத்தை ஹிம்ஸிக்க, வாழ்க்கை கசந்த நிலையில் இப்படிப் பேசுகிறான் ராமன். இந்த 'வேகவெம்பழி' வேறு பழிகளையும் நினைப்பூட்டுகிறது :

ஈன்றவர் இடர்பட,
எம்பி துவ்புறச்,
சான்றவர் துயருறப்
பழிக்குச் சார்வுமாய்த்
தோன்றலின், என்னுயிர்
துறந்த போதலால்,
ஊன்றிய பெரும்பழி
துடைக்க ஒன்னுமோ ?

[சான்றவர் - பெரியவர். சார்வு - ஆதாரம்.]

'தாய் தந்தையர், தம்பி பரதன், வசிஷ்டர் முதலான சான்றோர் — எல்லாருக்கும் இடர் விளைத்தேனே, நான் ஒருவன் தோன்றி!' என்பதாக எண்ணித் தன் வாழ்க்கையே பழி மயமாகி விட்டதென்கிறான். 'அப்படியெல்லாம் அவர்களுக்குத் துயர் விளைத்ததும் என் புண்ணியம் என்றே எண்ணுகிறேன். அதனால்தானே வனம் வந்து உங்கள் பணியிலே துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்யும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது!' என்று தண்டக வனத்துப் பெரியோர்களை நோக்கிப் பேசியதும் இதே ராமன்தான். இப்போது ஜடாயுவை இழந்து சீதையைப் பிரிந்த துயரமும் மனக் கசப்பும் எவ்வளவு உச்ச நிலையில் இருக்கின்றன என்பதைக் காட்ட இந்தக் கவந்தக் காட்சியைப் பயன்படுத்திக் கொள்கிறது கம்பனின் கலைத்திறன்.

ராமனுடைய இம் மனக் கசப்பிலே, மாமனான ஜனகனுடைய நினைவும் வருகிறது; திருமண நினைவுகளும் வருகின்றன.

'இல்இயல் புடையநீர்
அளித்த இன்சொலாம்
வல்லி,அவ் அரக்கர்தம்
மனையு ளாள்!'எனச்
சொல்லி,நன் மலையெனச்
சுமந்த தோள்மிசை
வில்லினென் செல்வெனோ
மிதிலை வேந்தன்பால்?

[இல் இயல்பு – இல்வாழ்க்கைக்கு உரிய தன்மை. இன்சொலாம் வல்லி – இனிய சொல்மலர்களைப் பூத்துச் சொரியும் பூங்கொடியாம் சீதை.]

'என் மனைவி இப்போது அரக்கர் மனையில் இருக்கிறாள்' என்று அந்த விலாசத்தை மிதிலை வேந்தனுக்குத் தெரிவிப்பதைக் காட்டிலும், தன் விலாசத்தை இவ் வுலகத்திலிருந்து மேலுலகத்திற்கு மாற்றிக் கொள்வதே நன்று என்கிறான் ராமன் :

'உளன்என உரைத்தலின்,
உம்ப ரான்என
விளிதல்நன்(று) ஆதலின்,
விளிதல்நன்(று)!' என்றான்.

[உரைத்தலின் — உரைக்கப் பெறுவதைவிட. உம்பரான் — மேலுலகத்தில் உள்ளவன். விளிதல் — இறத்தல்.]

ராமன் தம்பியை நோக்கிக் கூறுவதாக வரும் நான்கு கவிகளும், கம்பனுடைய கவித்திறனுக்கும் குணசித்திரக் கலைத்திறனுக்கும் ஒருங்கே சான்றுதருவன.

தம்பியின் சாகசம்

அண்ணனுடைய இந்த மனக்கசப்பு - நோய்க்குத் தம்பி தக்க மருந்து கொடுக்கிறான். 'இடர்தன்னை வென்றான்றோ வீரர்கள்?' என்று வீர தர்மத்தை நினைப்பூட்டுகிறான்.

> பூதம் கொல்லப்
> பொன்றுதி போலும் :
> பொருளுண்டோ ?

[பொன்றுதி — அழிவாய்.]

என்று கேட்கிறான். 'இந்தப் பூதமும் நம்மால் ஒரு பொருளாக மதிக்கத் தக்கதோ?' என்கிறான். 'பார் அண்ணா, இந்த வாளை; இது செய்யப் போகும் செயலையும் காண்பாய்' என்கிறான் :

> ' பிணிக்கும் கையும்
> பெய்பில வாயும்
> பிழையாமல்
> துணிக்கும் வண்ணம்
> காணுதி ; துன்பம்
> துற'வென்றான்.

[பிணிக்கும் - வளைத்துக் கட்டும். பெய் - பெய்துகொள்ளுகிற; வாரி உட்கொள்ளுகிற. பிலவாய் — பிலத் துவாரம் போன்ற வாய். பிழையாமல் - தவறாமல். துணிக்கும் வண்ணம் — வெட்டித் தள்ளும் அழகு. காணுதி — காண்பாயாக. துற - துறப்பாய்.]

' துன்பமே துறக்கத் தக்கது ; உன் உயிர் துறக்கத் தக்கதன்று' என்று சொல்லிவிட்டுத் தம்பி, அண்ணனுக்கு முன்னே போகிறான். ராமனோ உயிர்விட முந்திச் சென்றுகொண்டிருந்தான். இப்போது, 'பூதத்தை வெட்டித் தள்ளுவோம், அல்லது அண்ணனுக்கு முன் உயிர் விடுவோம் !' என்று தம்பி முற்பட்டுச் செல்லுகிறான், சென்று ராமனைத் தடுக்கிறான்.

ராம லட்சுமணர் கவந்தனை நோக்கி ஒருவரினும் ஒருவர் முற்பட்டுச் செல்லும் காட்சி :

> முன்னே செல்ல
> முன்னவன் அன்னு —
> னிலும்முந்தத்
> தன்னே ரில்லாத்
> தம்பி தடுப்பான்;
> பிறரில்லை !

இந்தக் காட்சியையும் கவந்தக் காட்சியையும் கண்டு விண்ணும் வெப்பமுற்று உருகி அழுகிறதாம். நிலமகளின் திரு முகத்தில் இரு கண்களல்லவா இவர்கள்? கவந்தனுக்கோ, இந்த வீர சகோதரர்கள் இப்படி ஒருவரோடொருவர் சாவுப் போட்டி போட்டுத் தன்னை நோக்கி வரும் அந்த வீரம் அசட்டுத்தனமாகவே தோன்றுகிறது.



309. கவந்தனும், ஒரு குறுக்குச் சூத்திரமும்

'உங்கள் தீவினையல்லவா இப்படி உங்களை என் கையில் சிக்க வைத்து, கைக்கு எட்டியதை வாயிலும் ஊட்டப் பார்க்கிறது? வீரர்காள்! நீங்கள் யாரோ?' என்று கவந்தன் அதட்டிக் கேட்கிறான், வீரக்கழல் கிண்கிண் என்று ஒலிக்கத் தன்னை நெருங்கி வந்துகொண்டிருக்கும் ராம லட்சுமணரை நோக்கி. ஏதோ அசட்டுத் தைரியத்தினால் இவர்கள் தனக்கு இரையாகவே வந்து விட்டார்கள் என்று கவந்தன் கருதி வினவ, வீரர்களோ 'இந்த அசட்டுக் கேள்விக்கு விடையும் வேண்டுமோ?' என்று சும்மா நிற்கிறார்கள்.

அதிசயமா, இகழ்ச்சியா?

சிறிதும் அச்சமில்லாமல், கண்ணிமையாமல் பார்க்கிறார்கள், தீவினையே உருண்டு திரண்டு கைகால் பெற்று அசடுவழிந்து நிற்கும் கோரத்தை:

இனைய ராகிய இருவரும்
முகத்திரு கண் போல்
கனையும் வார்கழல் வீரர்சென்(று)
அணுகலும் கவந்தன்,
'வினையின் எய்திய வீரர்நீர்
யாவர்கொல்?' என்ன
நினையும் நெஞ்சினர், பதைத்திலர்
இமைத்திலர் நின்றார்.

[இனையர் — இப்படிப்பட்டவர்கள். கனையும் — ஒலிக்கும். வார் கழல் — நீண்ட வீரக்கழல். வினை — (இங்கே) தீவினை. பதைத்திலர் — பதைப்பில்லாதவர்களாய்.]

கண்ணிரண்டும் ஒன்றையே நோக்குவதுபோல் ராமலட்சுமணர் இருவரும் ஒரே கருத்துடையவர் என்பது மட்டுமா? ஒரு கண் நோவு பட இரு கண்ணும் கலங்கும் என்பது போன்ற கருத்துக்களையும் உய்த்துணர

வைப்பதால் லட்சிய சகோதரர்களான ராமலட்சுமணருக்கு எவ்வளவு பொருத்தமானது 'முகத்து இரு கண்போல்' என்ற உபமானம்!

இவர்கள் கண்ணிமையாது பார்த்த அந்தப் பார்வையை இகழ்ச்சிப் பார்வையென்று கருதிக் கோபிக்கின்றான் கவந்தன். இவர்கள் மனங் கலங்காது நிற்பதும் கோபத் தீக்கு விறகிடக் கவந்தன் ஒவ்வொரு ரோமக்காலிலும் தீப்பொறி பறப்பதுபோல் கொதிப்புற்று, 'உங்களை விழுங்கி விடுவேன்' என்று தோள்பூரிக்கக் கிளம்புகிறான். அப்போது என்ன நடக்கிறது?



'விழுங்குவேன்' என ஓங்கலும்
விண்ணுற, வீரர்,
எழுந்ததோள்களை வாள்களால்
அரிந்தனர் இட்டார்.

[விண்ணுற எழுந்த தோள்களை —வானத்தை அளாவுவதுபோல் பூரித்த தோள்களை. அரிந்தனர் இட்டார்—வெட்டித் தள்ளினார்கள்.]

வீழ்ச்சியும் விமோசனமும்

ராட்சஸ சக்தி எவ்வளவு பிரமாதமாய்ப் படாடோபமாய்க் காணப் பட்டபோதிலும், அறம் என்ற உயிர்ச் சக்தி பெறாததால் எளிதில் வீழ்ச்சி யடைகின்றது என்ற உண்மையை வேறு இடங்களில் வெளியிடுவது போல் இங்கும் வெளியிடுவதற்காகவே கவந்தனின் வீழ்ச்சியை இவ்வளவு விரைவாக முடித்துக் காட்டுகிறான் கவிஞன்.

ராமபிரானின் கைகளால் தீண்டப் பெற்ற கவந்தன் தன் சாப விமோசனத்தின் மூலம் தீவினையை முடித்துக் கொண்டான். தோளை யிழந்ததில் கோர ரூபம் மேலும் கோரமாகி விட, அந்தத் தீவினைக் கூட்டிலிருந்து வெளிப் படுகின்றான், —கூட்டிலிருந்துகிளம்பி விண்ணுற நிமிரும் ஒரு பறவை போல:



ஆளும் நாயகன் அங்கையின்
தீண்டிய அதனுல்,
மூளும் சாபத்தின் முற்றிய
தீவினை முடித்தான்,
தோளும் வாங்கிய தோமுடை
யாக்கையைத் துறவா,
நீளம் நீங்கிய பறவையின்,
விண்ணுற நிமிர்ந்தான்.

[ஆளும் — (எல்லோரையும்) ஆட்கொள்ளும். அங்கை — அழகிய கை. வாங்கிய — அறுபட்ட. தோம் — தோஷம். யாக்கை — உடம்பு. துறவா — துறந்து. நீளம் — கூடு. பறவையின் — பறவைபோல.]

இரக்கமிலா அரக்க உருவம் ஒழிந்து தன் பழைய நல்லுருவம் பெற்ற கவந்தன் ஆகாய வீதியில் நின்ற வண்ணம் ராமனைத் தோத்திரம் செய்யத் தொடங்குகிறுன். ஆம், இவன் முன்னமே விண்ணவனுகத் திவ்ய ஸ்வ ரூபத்துடன் விளங்கியவன்தான்.

ராட்சஸ வேஷம் போட்டுக்கொண்டு முனிவர்களை ஹிம்ஸிக்கலானுன். அம்முனிவர்களில் ஒருவர், 'அட, கெடுவாய்! உன் கெடுமதிக்கும் கொடுந் தொழிலுக்கும் இசைந்த இவ்வுருவமே உனக்கு நிலைக்கக் கடவது' என்று சபித்து விட்டார். இந்தச் சாபத்திலிருந்துதான் இப்போது விடுதலை.

ஞானேதயம்

பழைய அழகிய வடிவம் பெற்றதும் ராமன் அவதார மூர்த்தி என்பதும் புலனுகி ஒரு புதிய ஞானமே உதயமாகி விட்டதாம் கவந்தனுக்கு:

விண்ணில் நின்றவன், விரிஞ்சனே
முதலினர் யார்க்கும்
கண்ணில் நின்றவன் இவன்எனக்
கருத்துற உணர்ந்தான்,
எண்ணி அன்னவன் குணங்களை
வாய்திறந்(து) இசைத்தான்.

[விரிஞ்சன் — பிரம்ம தேவன்.]

இறைவனருளால் தீவினை தீர்வது மட்டுமா ? — ஒரு புதுமைப் பெருவாழ்வும் சுடர் வீசி யெழுகின்றதாம்.

கவந்தன் செய்த தோத்திரத்திலிருந்து கம்பனுடைய ராம பக்தி குறித்து நாம் விசேஷ ஊகங்கள் செய்து கொள்வது மிகையாகாது. இந்தத் தோத்திரம் ஒன்பது கவிகளில் உருவாகின்றது. இக் கவிகள் ஆழ்வார்களின் பாசுரங்களையும், இவற்றில் பொதிந்திருக்கும் கொள்கைகள் ஆழ்வாராசாரியர்களின் கொள்கைகளையும் நினைப்பூட்டுகின்றன.

இத்தோத்திரத்தின் முதலாவது கவியை இப்போது பார்க்கலாம் :

நன்றவனே எப்பொருளும் ?
எல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனே ? தேவர்
தவத்தின் தனிப்பயனே ?

மூன்று கவடாய்
முளைத்தெழுந்த மூலமோ?
தோன்றி, இருவினையேன்
சாபத்(து) இடர்துடைத்தாய்!

[எல்லை தீர் — எல்லை தீர்ந்த; அழிவில்லாத. சான்றவனே — சாட்சியானவனே. கவடு — பிரிவு. இருவினையேன் — (பிராரப்தம், சஞ்சிதம் என்ற) இருவகைப் பட்ட தீவினைகளையுடைய எனது.]

ஒரு பெருங் கொள்கை

ஒரு மூலப்பொருள்—தனக்கு ஒரு மூலமில்லாத 'ஆதிமூலம்' என்ற வித்து அல்லது வேர்—முளைத்து மூன்று கவடாகி எழுந்து தழைத்து, மேலும் ஏழுமாய்ப் படர்ந்து வெளியாகவும் ஒளியாகவும் விண்ணாகவும் மண்ணாகவும் காற்றாகவும் ஜீவ சமுத்திரமாகவும் பரந்து கிடக்கிறதாம். தானாகவும் கோனாகவும் கரந்து (ஒளித்துக்) கிடக்கிறதாம் எல்லாப் பொருள்களிலும் மூலப் பழம் பொருள்—ஆதிமூலப் பரம்பொருள். வித்தில்லாத விளைவன்று, கோனில்லாத மந்தையன்று, ஆட்சியில்லாத அராஜகமன்று, உலகம். இவ்வுலகை நிலைகுலையாது, ஒழுங்கு தவறாது காக்கும் சட்டமாகிய விதிக்கு நல்லறம் என்றும் பெயர். சட்டத்திற்குச் சாட்சியும், சட்டம் காக்கும் நீதியும் நீதிபதியும் கோனாகிய ஆதிமூலம்தான்.

வாழ்க்கை ஒரு பெரும் போராட்டம், ஒரு பெரும்பெரும் பாரதம். இரண்டு உலக மகா யுத்தங்கள் மட்டுமா, எத்தனையோ உலக மகாயுத்தங்கள், தேவ சக்திகளுக்கும் அசுர சக்திகளுக்கு மிடையே! ஆம், எத்தனை தேவாசுர யுத்தங்கள், ராம ராவண யுத்தங்கள்!—குறுக்கும் நெடுக்குமாய் மயக்கி மடக்க வரும் எத்தனை விராத கவந்தர்கள்! எனினும் நல்லறக் காதலர்களான சாதுக்களும் தேவர்களும் செய்த தவப்பயனாகத் தேவசக்திகளுக்குத் தேவதேவனான பரம்பொருளின் உதவி தக்க சமயத்தில் கிடைத்து விடுகிறதாம்.

பரம்பொருளின் சக்தி சாதுக்களுக்கு அறக்கருணை யாகவும், துஷ்ட அசுரர்களுக்கு மறக்கருணையாகவும் வெளிப்படுகிறதாம். இந்த வெளிப்பாடு அல்லது தோற்றம் தான் அவதாரம். உலகத்தில் இடர் துடைப்பது அவதாரமூர்த்திகளின் பணி. சிஷ்டர்களுக்கு மட்டுமல்ல, துஷ்டர்களுக்கும் தான்! இனிய நன்னெஞ்சில் எழுந்தருளியிருந்து திருத்தும் பகவான் வன்னெஞ்சைப் பிளந்து திருத்துகிறான் என்பர் நம்மாழ்வார். இக் குறிப்பினை உள்ளத்திற் கொண்டு பேசுவது போல் கம்பனின் கவந்தன்,

தோன்றி, இருவினையேன்
சாபத்(து) இடர்துடைத்தாய்!

என்கிறான்.

வாழ்க்கையின் ஒரு குறுக்குச் சூத்திரமாக உபயோகித்துக் கொள்ளத் தக்க இக்கொள்கையைத் தொடர்ந்து பார்ப்போம் 'கவந்தஸ்தோத்திர'த்திலே.



310. தத்துவப் பெருங்கோயில்

வால்மீகி மகரிஷி படைத்துவிட்ட ஒரு கேலிச் சித்திரம் கவந்தன்—வடமொழியில் கபந்தன். ஆரணிய காண்டத்தின் முகப்பிலே விராத சித்திரம்; இறுதியில் கவந்த சித்திரம். ராட்சஸ நாகரிகம் என்ற ஏணி ஏற்றத்திலே இந்த இரண்டு அரக்க பூதங்களையும் முதல் இரண்டு படிகளாய்க் கருதலாம். கவந்தன் முதற்படி; விராதன் இரண்டாம் படி. இருவருக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை ஆராய்வதற்கு முன், இந்த இருவரும் ஞானம் பெற்றபின் செய்யும் தோத்திரங்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

கபந்த ஸ்தோத்திரம்

விராதன் கவந்தன் என்ற இரண்டு பயங்கரங்களுக்குமிடையே தாரதம்மியங்கள் உண்டு; ஆனால் இருவர் தோத்திரங்களுக்குமிடையே தத்துவ ஒற்றுமைதான் காணப்படுகிறது. இருவரும் சொல்லால் கட்டி நிறுத்துவது ஒரே தத்துவக் கோயில்.

எண்திசையும் திண்சுவரா
ஏழேழ் நிலவகுத்த
அண்டப் பெருங்கோயிற்(கு)
எல்லாம் அழகுடைய
மண்டலங்கள் மூன்றின்
மேல்,என்றும் மலராத
புண்டரிக மொட்டின்
பொகுட்டே புரைஅம்மா!

[ஏழ் ஏழ் — பதினான்கு. புண்டரிகம் — தாமரை. பொகுட்டு — கொட்டை. புரை — இருப்பிடம்.]

என்பது கவந்தனின் ஒரு தோத்திரப் பகுதி. எட்டுத் திசைகளையும் சுவராக எழுப்பி, உலகங்களை ஒன்றன் மேல் ஒன்றாக எழுநிலை மாடங்

களாக அமைத்திருக்கிறதாம் பரம்பொருள். இம் மாடங்களெல்லாம் சேர்ந்தது அண்டப் பெருங் கோயில். இக் கோயிலுக்கு அழகுத் தீபங்கள், சந்திரமண்டலம் சூரியமண்டலம் நட்சத்திரமண்டலம் என்ற மூன்றும். இந்த உலகங்களுக்கும் மண்டலங்களுக்கும் மேல் உள்ளது பரமபதம். இது உலகங்களுக்கெல்லாம் உயர்நிலையாக, இதயஸ்தானமாக உள்ளது. இப் பரம பதத்தில் பரம்பொருளின் இருப்பிடம், என்றும் மலராத தாமரைக் கொட்டைபோல் உள்ளதென்பது ஒரு தத்துவக் கற்பனை.

இந்த அண்டப் பெருங்கோயிலில் எங்கும் அந்தர்யாமியாகவும் பரவியிருக்கிறது பரம்பொருள். இப்பரம்பொருளே ராமன் முதலான அவதார மூர்த்திகளாகவும் உலகத்தைக் காப்பாற்ற வந்து நம்முடைய சுகதுக்கங்களிலும் பங்கெடுத்துக் கொள்கின்றதாம். இந்த அவதார ரகஸ்யம் எவராலும் அறிய முடியாதது என்கிறான் கவந்தன்:

மூலமே இல்லா
முதல்வனே! நீஎடுத்த
கோலமே யார்க்கும்
தெரிவரிய கொள்கைத்தால்.

[கோலம் – அழகிய வடிவம். தெரிவு அரிய – தெரிய முடியாத. கொள்கைத்து – கொள்கையை உடையது.]

அவதார மூர்த்தியாகப் பார்க்கும்போது ராமன் கண்ணன் என்றெல்லாம் கோலம் பூண்டிருந்தபோதிலும் பரம்பொருளைத் தத்துவக் கண்கொண்டு காண முயல்வோருக்கு,



பூண்பாய்போல் நிற்றியால்,
யாதொன்றும் பூணுதாய்

[பூண்பாய் போல் — பூண்டு கொண்டவனைப்போல். நிற்றி — நிற்கின்றாய்.]

என்றுதான் சொல்லத் தோன்றுகிறதாம்.

ஆண்பாலோ? பெண்பாலோ?
அப்பாலோ? எப்பாலோ?

[அப்பாலோ — ஆணும் பெண்ணும் அல்லாத அலியோ. எப்பாலோ — வேறு எந்த வகுப்பில் சேருமோ.]

என்றுதான் அவர்கள் திகைத்துப் போகிறார்களாம். 'ஜோதிச் சுடர்ப் பிழம்பு' என்ற அந்தப் பரஞ்சோதியே ஒளி காட்டித்தான் வழி காண இயல்கின்றது. இப்படித் தத்துவ வழி கண்டும்,

ஆதிப் பிரமனும்நீ;
ஆதிப் பரமனும்நீ
ஆதிஉறு பொருளுக்(கு)
அப்பால்உண் டாயினும்நீ.

[ஆதி உறு பொருள் — ஆதி மூலப் பொருள்.]

என்றுதான் பேச முடிகிறது. 'கண்டவர் விண்டிலர்' என்று சொல்லும் அற்புதமல்லவா?

இத்தகைய அற்புதப் பரம்பொருள் தனக்கு நற்கதியளித்ததும் அற்புதமாகவே தோன்றுகிறது கவந்தனுக்கு:

'மாயப் பிறவி
மயல்நீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித்
துயரின் கரையேற்றிப்
பேயொத்தேன் பேதைப்
பிணக்கறுத்த எம்பெருமான்!
நாயொத்தேன் என்ன
நலன்இழைத்தேன் நான்?' என்றான்.

[மயல் — மயக்கம். காயம் — சரீரம். மாசிலாக் காயம் — திவ்ய சரீரம். நல்கி — கொடுத்த. பேதைப் பிணக்கு - என் அறியாமையால் நான் உன் மீது கொண்ட பகைமை.]

இப்படித் தோத்திரம் செய்து தாயைக் கண்ட கன்றுபோல் நின்ற கவந்தனை ராமன் பார்க்கிறான், அந்தத் திவ்ய சரீரத்திலே. அப்போது கவந்தன் தன் வரலாறு கூறுகிறான், தான் உண்மையில் ஒரு கந்தர்வன் என்றும், கெடுமதியால் அரக்க உருவம் கொண்டு முனிவர்களை ஹிம்ஸிக்க ஒரு முனிவர் தன்னைச் சபித்து விட்டார் என்றும் தெரிவிக்கிறான்.

கவந்தனும் விராதனும்

இனி நாம் மிகச் சுருக்கமாக விராதனுடைய தோத்திரத்தையும் ஞாபகப்படுத்திப் பார்க்கலாம். உலகங்களை யெல்லாம் வியாபித்து அப்பாலும் நிற்கும் பரம்பொருளுண்மையைத் திவ்ய சரீரம்பெற்ற விராதனும் உணர்ந்து தோத்திரிக்கிறான். ஆதிமூலப் பரம்பொருளே அறங் காக்க ராமனுடைய கோலத்தில் வந்து திரிவதாகக் கூறுகிறான். இந்த அவதாரமும், இதிலே இறப்பும் பிறப்பும் எல்லாம், தெய்வத் திருவிளையாட்டு என்கிறான். இப்படியெல்லாம் விராதன் செய்யும் தோத்திரமும் ஸாராம்சத்தில் கபந்த ஸ்தோத்திரத்தை ஒத்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. இருவரும் கட்டிய தத்துவப் பெருங்கோயில் கம்பன் வழி படும் கோயில்தான்.

* * *

கடைசியாக, விராதன் கவந்தன் என்ற இரண்டு பயங்கர சொரூபங்களுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகளையும் இரத்தினச் சுருக்கமாகப் பார்த்து விடுவோம். அரக்க உலகம் என்ற இருளுலகத்தை முன்கூட்டியே கட்டியம் கூறி அறிவிப்பது போல் வருகிறான் விராதன் என்ற ராட்சஸக் கோமாளி. கவந்தனைப்போல் மூளை இல்லாத பூதமல்ல விராதன்.

நன்று தீது நாடலேன்,
தின்று தீய தேடினேன்

என்கிறானல்லவா? நன்று தீது நாடும் மூளையைப் பேசாமடந்தையாக்கி விட்டான். நமது உலகில் காணப்படும் கொடுமைகளுக்கும் அபார மிருக பலத்திற்கும் ஓர் அறிகுறி விராதன். கவந்தனோ 'மிருக மனித'னுக்கும் கீழ்ப்படியில் உள்ள 'பேய் மனித'னுக்கு அறிகுறி.